மினுங்கும் வைரங்களுக்கும்
தங்கப்பவுண் நகைகளுக்கும்
AKS
போன்: 519
நகை மாளிகை
கன்னாதிட்டி, யாழ்ப்பாணம்.

Registered as a Newspaper in Ceylon விலை சதம் 10

# ஈழநாடு
THE EELA NADU

தேசிய தினசரி National Tamil Daily
மலர் 8 (21-11-66) இதழ் 281
பராபவ ஷஃபான் 7 கார்த்திகை 6 திங்கட்கிழமை

## மலலசேகரா ஜனவரியில் பதவி ஏற்பார்

கொழும்பு, ஞாயிறு
தேசிய கல்விச் சபையின் தலைவராக நியமிக்கப்பட்டிருக்கும் டாக்டர் மலலசேகரா ஜனவரிமாதம் முதலாம் திகதி முதல் தமது பதவியை நிரந்தரமாகப் பொறுப்பேற்றுக் கொள்வார். அவருக்கு மாதம் ரூ 3000 வேதனமாக வழங்கப்படும். சபையின் இதர அங்கத்தவர்கள் ஒவ்வொரு கூட்டத்துக்கும் ரூ 100 வீதம் பெறுவார்கள்.

# இந்துக்களின் அவசர கடமை: தடை நீக்குக!

## ஆலயப்பிரவேசம் பற்றி சுவாமி ரங்கநாதானந்தா

யாழ்ப்பாணம், திங்.
"யாழ்ப்பாணத்திலே சில இந்துக்கோவில்கள் ஹரிஜனங்களுக்கு இன்னும் மூடப்பட்டிருப்பதை இங்கு வந்ததும் அறிந்து திணுக்குற்றேன். இந்தியாவிலே இந்த நியாயமான உரிமையை ஹரிஜனங்கள் பல ஆண்டுகளுக்கு முன்பே கல்வி மூலமும், நியாயமான சமரச வழியிலும் பெற்றுவிட்டார்கள்."

என்றிவ்வாறு சுவாமி ரங்கநாதானந்தா 'ஈழநாடு' விசேஷ பிரதிநிதியிடம் ஆலயப் பிரவேசப் பிரச்னையைப் பற்றிக் குறிப்பிட்டு மேலும் கூறியதாவது;

தீண்டாமை என்பது தங்கள் புராதன இந்துசமயத்தில் புகுந்துவிட்ட ஒரு தீமை என்பதை இந்தியாவிலுள்ள சாதி இந்துக்கள் உணர்ந்துவிட்டார்கள். இந்துசமயத்தின் உண்மையான தத்துவங்களை அறியாததால் தான், இந்தத் தீமை இந்துசமயத்திலும், இந்துசமூகத்திலும் புகுந்துவிடக்காரணமாகும்.

நமது ஆலயங்களில் எந்த ஓர் இந்துவையும் விடமுடியாதென்று தடுக்குங் காலம் மலையேறிவிட்டது. அதிலும் நமது சகோதரர்களான ஹரிஜனங்கள் பல கொடுமைகளையும் சகித்துக்கொண்டு இன்னும் பொறுமையுடனும், நம்பிக்கையுடனும் இந்துசமூகத்தில் இருப்பது இந்தப் புராதன சமயத்திலே அவர்களுக்குள்ள ஆழ்ந்த பக்தியையும் பற்றுதலையும் குறிக்கின்றது.

தீண்டாமை என்னும் தீமை இந்தியாவில் நீக்கப்பட்டுவிட்டது. இலங்கையிலிருந்தும் இது ஒழிக்கப்பட வேண்டும். நமது கோயில்களிலே எல்லா இந்துக்களையும்போல் வழிபடுவதற்கான உரிமையை ஹரிஜனங்களுக்கும் வழங்குவதன் மூலம் இத்தீமையை ஒழிக்க தக்க நடவடிக்கைகளை எடுக்கவேண்டியது இலங்கை இந்துக்களின் கடமையாகும்.

எல்லா மக்களிலும் கடவுள் இருக்கிறாரென்று நமது சமயம் உபதேசிக்கின்றது. யாரையும் அவமதித்து நடத்துவதாயின் அது நமது சமய ஆத்மீக உபதேசத்தை மீறுவதாகும். சமூகத்தில் இன்றுள்ள கொடிய எண்ணங்களை கிட்டு, விரிவான சமய ஆத்மீக அடிப்படையில் இலங்கையிலுள்ள இந்து வைதீகர்கள் வாழ முன்வருவர் என்பதே எனது நம்பிக்கை.

இந்தியாவிலுள்ள இந்துக் கோயில்களில் எல்லாம் இதுந் சமூகத்தைச் சேர்ந்த எல்லாச் சாதியினரும் பெருந்திரளாக வந்து வழிபடுகின்றார்கள் இந்த முற்போக்கான புன் மாதிரியை இலங்கையிலுள்ள இந்து ஆலயங்களும் பின்பற்றவேண்டியது மிக அவசரமான காரியமாகும். நமது வைதீகர்கள் ஆத்மீ

(8-ம் பக்கம் பார்க்க)

### 'ஆத்மீக, சமூகவாழ்வை பிணைப்பது பகவத்கீதை'

"பகவத்கீதை மனிதனின் ஆத்மீக வாழ்வையும், சமூக வாழ்வையும் ஒன்றாகப் பிணைத்தது. அதுவே பகவத்கீதையின் முக்கிய போதனையாகும்."

இவ்வாறு கல்கத்தா ராமகிருஷ்ண மிஷன் நிலையத்தின் காரியதரிசியான ஸ்ரீமத் சுவாமி ரங்கநாதானந்தாஜி நேற்று மாலை வண்ணை வைத்தீஸ்வர வித்தியாலய மண்டபத்தில் 'பகவத் கீதையின் முக்கிய போதனை' என்னும் பொருள்பற்றி உரையாற்றுகையில் குறிப்பிட்டார்.

அவர் தொடர்ந்து கூறியதாவது: "மனிதன் சமூகத்தின் வெறும் அம்சமாக இருந்துவிட்டால் போதாது. அவன் உண்மையான சத்தியத்தை எப்பொழுதும் நாட வேண்டும்.

மனிதன் வெறும் சுலோகங்களைத் திருப்பித்திருப்பிச் சொல்வதாலோ, அல்லது வெறும் பிரார்த்தனையினாலோ கடவுளை அடைந்துவிடமுடியாது அவன் கடுமையாக உழைக்க வேண்டும். உலகில் தனக்குள்ள கடமைகளை நிறைவேற்ற வேண்டும். எல்லா மனிதரிலும் அவன் கடவுளையே காணவேண்டும். தனக்கென வாழாது, பிறர்க்கென வாழவேண்டும். மனித சேவை மூலம் தான் அவன் கடவுள் அருகே வரமுடியும்

சுவாமி ரங்கநாதானந்தாஜியின் பேச்சை, இராமகிருஷ்ண மிஷனின் யாழ்ப்பாணக்கிளை ஒழுங்கு செய்திருந்தது.

இக்கூட்டத்துக்கு டாக்டர் பி பசுபதி தலைமை தாங்கினார். கூட்ட இறுதியில், வண்ணை வைத்தீஸ்வர வித்தியாலய அதிபர் திரு. ச. அம்பிகைபாகன் நன்றியுரை வழங்கினார்.

#### 'சமூக சேவைக்கு பெண்கள் முன்வர வேண்டும்'

"சமூக சேவைக்கு இந்துப் பெண்மணிகள் முன்வரவேண்டும். டில்லி முதலிய இடங்களிலே இந்துப்

(8-ம் பக்கம் பார்க்க)

2-வது டெஸ்ட் கிரிக்கட்

## இலங்கை 2-வது இன்னிங்சில் 3:153

டாக்கா, நவ. 20
இலங்கை கோஷ்டிக்கும் பாகிஸ்தான் கோஷ்டிக்குமிடையில் இங்கு நடைபெறும் 2-வது கிரிக்கெட் டெஸ்ட்போட்டியின் 3-வது நாளான இன்று இலங்கை முதல் இன்னிங்சில் சகல விக்கெட்டுகளையும் இழந்து 213 ரன்களை எடுத்திருந்தது.

இரண்டாவது இன்னிங்சில் இலங்கை மூன்று விக்கட்டுகளை இழந்து 153 ரன்களை எடுத்திருந்தது.

## உள்ளூர் பொருட்களுக்கு விலை நிர்ணயிக்கப்படும்

கொழும்பு, ஞாயிறு
உள்நாட்டில் தயாரிக்கப்படும் பொருட்களுக்கு அதிகபட்ச விலைகளை நிர்ணயிக்க அரசாங்கம் உத்தேசித்திருக்கின்றது.

உள்நாட்டு உற்பத்திப் பொருட்களுக்கு அளிக்கப்பட்ட வசதிகளைப் பயன்படுத்தி விலைகளில் மோசடி நடத்தப்படுவ தாகக் கருதப்படுவதே இப்போது அதிகபட்ச விலை நிர்ணயிக்கப்படவிருப்பதற்குக் காரணம் என்று கருதப்படுகிறது. இது சம்பந்தமாக புதியமசோதா ஒன்று தயாரிக்கப்பட்டிருக்கின்றது.

இந்தியாவில் இருப்பது போன்ற

## சாகித்திய அக்கடமி இங்கு உருவாக வேண்டும்

### டாக்டர் குருகே கருத்து

கொழும்பு, ஞாயிறு
இந்தியாவில் இருப்பது போல இலங்கையிலும் சாகித்திய அக்கடமி ஒன்று நிறுவப்பட வேண்டுமென்று கல்வி அமைச்சின் உதவிக் கல்வி அதிபர் டாக்டர் ஆனந்தகுருகே கருத்துத்தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நடைபெற்ற தமிழ்—சிங்கள இசை பற்றிய கருத்தரங்கில் அவர் உரைநிகழ்த்துகையிலேயே இக்கருத்தை வெளியிட்டார் இக்கருத்தரங்கில் இந்திய தூதரலாயத்தைச் சேர்ந்த திரு. திருப்பாத்தி பேசும்போது, இந்திய சாகித்திய அக்கடமி பற்றிக் குறிப்பிட்டார்.

இந்தியாவில் பல மொழிகளிலும் உருவாகும் மிக உயர்ந்த படைப்புகளை அதிகாரபூர்வமாக மொழிபெயர்ப்புகள் தயாரிப்பதன் மூலம் அவை எல்லா மொழிகளிலும் கிடைப்பதற்கு சாகித்திய அக்கடமி வழிசெய்வதாக அவர் கூறினார். இதனால் இந்திய மொழிகளைப் பயிலும் மாணவர்கள் அந்த மொழியிலுள்ள சிறந்த படைப்புகளைத் தெரிந்துகொள்ள வாய்ப்பு ஏற்படுகின்றது என்றும் கூறினார்.

டாக்டர் ஆனந்தகுருகே பேசுகையில், திரு திருப்பாத்தியின் கருத்தைச் சுட்டிக்காட்டி அப்படியான ஒரு அக்கடமி இலங்கையில் உருவாகவேண்டும் என்றும் இதனால் தமிழில் உருவாகும் சிறந்த படைப்புகள் சிங்களத்திலும், சிங்களத்தில் உருவாகும் சிறந்த படைப்புகள் தமிழிலும் அதிகாரபூர்வமாக மொழிபெயர்க்கப்படலாம்என்றும் கூறினார்.

இதர துறைகளிலும் இந்த முறை கடைப்பிடிக்கப்பட வேண்டுமென்று கூறிய அவர், அரசியல் ரீதியில் மட்டும் தேசிய ஐக்கியம் உருவாகிவிட்டால் போதாதென்றும், கலை கலாச்சாரம் ஆகிய விஷயங்களிலும் தேசிய ஐக்கியம் உருவாக வேண்டுமென்றும் கூறினார். இம்மாதிரியான நடவடிக்கைகள் மூலம் நாட்டின் நிரந்தர ஐக்கியத்துக்கு வழிகோல முடியும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

பலாலி

## விமான நிலையத்தில் சிக்கிய கடத்தல் பொருள்கள்

### இரண்டுபிரயாணிகள் அபராதம் செலுத்தினர்

மாவிட்டபுரம், ஞாயிறு
இலங்கையிலிருந்து இந்தியாவுக்குச் சட்டவிரோதமாகக் கடத்திச் செல்லப்பட்டதாகக் கருதப்படும் பொருள்கள் இன்று பலாலி விமான நிலையத்தில் சிக்கிக்கொண்டன.

கொழும்பிலிருந்து திருச்சி நோக்கி விமானத்தில் பிரயாணம் செய்த கொழும்பைச் சேர்ந்த சாஹுல் ஹமீத் ஹட்டனைச் சேர்ந்த கே. துரைசாமி ஆகியோர் வைத்திருந்த 'பிரயாணிகள் பை' பலாலி விமான நிலையத்தில் பரிசோதனைசெய்யப்பட்டபொழுதே இக் கடத்தல் பொருள்கள் கண்டுபிடிக்கப்பட்டன. சாஹுல் ஹமீத் வைத்திருந்த பிரயாணிகள் பையை சப்கலெக்டர் திரு. வி. இரத்தினம் சோதனையிட்டபொழுது அதன் இரு இரகசிய அறையில் 750 ரூபா பெறுமதியான தங்கம் அரியும் தகடுகள் இருக்கக்கண்டுபிடிக்கப்பட்டன. கே. துரைசாமியின் பிரயாணிகள் பையைச் சோதனையிட்ட பொழுது அதிலிருந்த ஒரு இரகசிய அறைக்குள் மூன்று ரப்பவுண் நிறையுள்ள தாலிக்கொடியும் 5 பவுண் நிறைவுள்ள நெக்லசும் பதக்கமும் மற்றும் தங்கத்தோடும் தங்கம் அரியும் தகடுகளும் கைக்கடிகாரங்களுமிருக்கக் கண்டுபிடிக்கப்பட்டன. இவற்றை உதவி சப்கலெக்டர் திரு ஏ, பரம்சோதி கண்டுபிடித்தார்.

இருநபர்களும் காங்கேசன்துறை சுங்ககாரியாலயத்தில்

(8-ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வரிவிளம்பரம்

### விற்பனைக்கு

கோழிக்குஞ்சுகள்!

உயர்ந்த இனக் குஞ்சுகள், நிதானமான விலைகள். இலாபம் எங்கும் 100% இலாபம். பத்துக் கோழிகளால் பெறும் வருமானத்தை ஒரு கோழி உங்களுக்குக் கொடுக்கும். மேலும் மேலும் உங்களையும் உங்கள் அயலவரையும் ஊக்குவிக்கும். எம்மிடம் மருந்துகளும் பெற்றுக் கொள்ளலாம். அருண ஏஜென்சிஸ், அளவெட்டி.

1492


## வானொலி

### கொழும்பு

**திங்கள் 21 - 11 - 66**

(செய்திகள்: காலை 7-00, பகல் 12-45, மாலை 6-00, இரவு 9-00)

844 மீற்றர் & 61 மீற்றர் காலை 6-45 நாதாஞ்சலி, 6-50 சைவநற்சிந்தனை, 6-55 கத்தோலிக்க நற்சிந்தனை, 7-15 துதிப்பாடல்கள், 7-30 குரல்வகை, 7-45 திரை இசை, 8-15 இஸ்லாமிய கீதங்கள்.

844 மீற்றர் & 49 மீற்றர் பகல் 12-00 சித்திரகானம், 1-00 [illegible] இசை.

844 மீற்றர் & 61 மீற்றர் மாலை 5-00 பிறந்ததின வாழ்த்துக்கள், 5-30 பட்டத்திலிருந்து.

இரவு 6-10 விவசாயச் செய்திகள், 6-15 இராமசஞ்சிகை, 6-45 நிலையஒலிப் பதிவுகள், 7-30 கலைக்கோலம் — கலைகலை மதிப்பீடு, 8-00 முஸ்லிம் நிகழ்ச்சி, 9-15 வாத்திய இசை, 9-30 தமிழ் மூலம் சிங்களம், 9-45 ஆமந்திகை, 10-15 நேயர் விருப்பம்.

## அபராதம்

நாவலப்பிட்டி, ஞாயிறு

ஒரு இருத்தல் மாவின் விலையில் அரைச்சதம் அதிகரித்து விற்பனை செய்ததற்காக அம்பகமுவ வீதியைச்சேர்ந்த ஜனுப் ஹனிபா என்பவருக்கு நாவலப்பிட்டி மாஜிஸ்திரேட் ஐம்பதுரூபா அபராதம் விதித்தார்.


**மகாத்மா தியேட்டர்**
(தெல்லிப்பழை)
தினசரி 6-30, 9-30
போயா தினங்களில் காலை 10 மணி
சிவாஜி—சாவித்திரி
நடித்த
**திருவிளையாடல்**
பிரதமரின் யாழ்ப்பாண விஜயமும் காண்பிக்கப்படும்

**யாதவா**
(மூளாய்)
தினசரி 6-30, 9-30
விடுமுறை நாட்களில் 2-30 மணி
சிவாஜி - சாவித்திரி
நடித்த
**காத்தவராயன்**


**நியூ காலிங்கன்**
(இணுவில்)
தினசரி 6-30, 9-30 மணி
விடுமுறை தினங்களில் 2-30 மணி
எஸ்.எஸ்.ஆர். -விஜயகுமாரி
நடித்த
**நானும் ஒரு பெண்**

**REGAL—JAFFNA**
NOW SHOWING
Gregory Peck
in
TO KILL A
MOCKING BIRD

**ராஜா**
(யாழ்ப்பாணம்)
தினசரி 2-30, 6-30, 9-45
போயா தினங்களில் 4 காட்சிகள்
எஸ்.எஸ். ஆர் - விஜயகுமாரி
நடித்த
**முத்துமண்டபம்**

**2வது வெற்றி வாரம்!**

| | | |
|---|---|---|
| கிங்ஸ்லி (கொழும்பு) | பிளாஸா (வெள்ளவத்தை) | நவா (கொம்பனித்தெரு) |
| வெலிங்டன் (யாழ்ப்பாணம்) | விஜயா (மட்டக்களப்பு) | ஸ்ரீகிருஷ்ணா (திருமலை) |
| மொடேர்ண் (பண்டாரவளை) | மொடேர்ண் (பதுளை) | விஜிதா (ஹட்டன்) |



**சிவாஜி கணேசன், தேவிகா**
சந்திரபாபு, புஷ்பலதா, அசோகன், பாலாஜி,
நாகையா, ஏ. வி. எம். ராஜன்
ஜாவர் சீதாராமன், பி. எஸ். வீரப்பா
நடிக்கும்
**ஆண்டவன் கட்டளை**
இசை: விஸ்வநாதன் இராமமூர்த்தி
டைரக்ஷன்: சங்கர்


## 'கெயர்' மாவு திருட்டு வழக்கு

மாவிட்டபுரம், ஞாயிறு

நீர்வேலியிலுள்ள ஒரு பாடசாலையைச் சேர்ந்த உதவி ஆசிரியர் சென்ற ஜூலை மாதம் 10-ம் திகதி மேற்படி பாடசாலை அதிபரின் பொறுப்பிலிருந்த பாடசாலையை, களவெடுக்கும் நோக்குடன் உடைத்ததாகவும், 295 ரூபாய் பெறுமதியான ஐந்து மூடை 'கெயர்' மாவைக் களவெடுத்ததாகவும், ஐந்து மூடை 'கெயர்' மாவையும் வைத்திருந்ததாகவும் குற்றம் சாட்டி கோப்பாய் பொலிஸாரால் தொடரப்பட்ட வழக்கு யாழ்ப்பாணம் மாஜிஸ்திரேட் நீதிபதி திரு. ரி. ஜே. இராசரத்தினம் முன்னிலையில் எடுத்துக்கொள்ளப்பட்டது.

பொலிசார் வழக்கு விசாரணைக்கு ஆயத்தமில்லை என்று தெரிவித்ததைத் தொடர்ந்து நீதிபதி வழக்கை அடுத்தமாதம் 14ம் திகதிக்கு ஒத்திவைத்தார். எதிரி தரப்பில் வழக்கறிஞர் திரு. ஆர். ஜே. செல்வரத்தினம் ஆஜரானார்.

## இலங்கையர் பம்பாயில் கைது

பம்பாய், நவ. 20

கள்ளபாஸ்போர்ட் பயன்படுத்தியதாகவும், சட்ட விரோதமாக அந்நியசெலாவணியைப் பெற்றதாகவும், இலங்கையர் ஒருவர் இங்கு கைது செய்யப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டது.

பொலிசாருக்குக்கிடைத்த இரகசியத் தகவலைக் கொண்டு இந்தநபர் தங்கியிருந்த ஹோட்டல்ஒன்றில் வைத்து இவரைக் கைது செய்தனர். இவரின் பெயர் அல்ரெட் டிக்கஸ். தற்போது இவர் பொலிஸ் பாதுகாப்பில் வைக்கப்பட்டுள்ளார்.

## அபராதமும் மறியலும்

கொழும்பு, ஞாயிறு

கட்டுப்பாட்டு விலையை மீறி 'ஒரு இருத்தல் மாட்டிறைச்சியை ஒரு' ரூபாவிற்கு விற்றதற்காக ஏ. பியதாசா என்பவர் மீது தொடரப்பட்ட வழக்கில் எதிரி குற்றத்தை ஒப்புக்கொண்டதன் பேரில் எதிரிக்கு மாஜிஸ்திரேட் '750 ரூபா அபராதமும் ஒரு மாத கடுங்காவலும் விதித்தார்.

## தொழிற்சாலையில் திருட்டு முயற்சி

### நால்வர் கைது

மாவிட்டபுரம், ஞாயிறு

மாவிட்டபுரம் அலுமினியத்தொழிற்சாலையில் நடைபெற்ற திருட்டு முயற்சி சம்பந்தமாக நால்வரைப் பொலிஸார் கைதுசெய்து றிமாண்டில் வைத்துள்ளார்கள். காங்கேசன்துறைப் பொலிஸ் சப்-இன்ஸ்பெக்டர் திரு. கே. செல்லையாவுக்குக் கிடைத்த ஓர் இரகசியத் தகவலைத் தொடர்ந்து அவர் தலைமையில் சென்ற பொலிஸார் சந்தேகத்தின்பேரில் செல்லத்தம்பு செல்வத்துரை, வல்லிபுரம் குழந்தைவேலு, கிருஷ்ணா வயிரவநாதன், அழகிரிசாமி இராசா ஆகிய நால்வரையும் கைதுசெய்துள்ளார்கள். இவர்கள் நால்வரும் மல்லாகம் நீதிபதி திரு. டி. எல். திந்சிங்கா முன்னிலையில் ஆஜர்செய்யப்பட்டபோது நீதிபதி நால்வரையும் றிமாண்டில் வைக்கும் [illegible] விதித்தார்.

'ரேயல்கல்லூரியில்

## தமிழ் தேர்ச்சிபெற்ற சிரேஷ்ட ஆசிரியர்நியமிக்கப்படவேண்டும்

யாழ்ப்பாணம், திங்

''ரோயல் பாடசாலையில் தமிழ்மொழி மூலம் கல்வி கற்பிக்கும் ஆசிரியர்களை மேற்பார்வை செய்வதற்குத் தலைமையாசிரியருக்குப் போதிய தமிழறிவு இல்லையென்பதைக் கல்விமந்திரி அறிவாரா?''

இம்மாதம் 23ந் தேதி பாராளுமன்றத்தில் கிளிநொச்சி எம். பி. பண்டிதர் க. பொ. இரத்தினம், கல்விமந்திரி திரு. இரியகொல்லையிடம் மேற்கண்ட கேள்வியைக் கேட்பார்.

இழ்க்காணும் கேள்விகளையும் கிளிநொச்சி எம். பி., கல்விமந்திரியிடம் கேட்பார்.

ரோயல் ஆரம்ப பாடசாலையில் தலைமையாசிரியர் தமிழ்ப் பிள்ளைகளுக்குப் பெற்றோருக்கும் பெரும்பாலும் சிங்களத்திலும், தமிழிலும் சுற்றறிக்கை அறிவிப்பு முதலியவற்றை அனுப்புகிறாரென்பதை மந்திரி அறிவாரா?

தமிழ் கற்பிப்பதை மேற்பார்வை செய்வதற்கும், தமிழ்ப்பகுதிக்குப் பொறுப்பாயிருந்து, அதனைத் திறம்பட நடத்துவதற்கும் தலைமையாசிரியருக்கு உதவி செய்வதற்கும் தமிழ்மொழியில் ஆற்றலுடைய ஆசிரியர் ஒருவரைச் சிரேஷ்ட உதவியாளராக நியமிப்பதற்கு நடவடிக்கை எடுப்பாரா?

## தபாற் தந்தியாளர் பரீட்சை முடிவுகள்

கொழும்பு, ஞாயிறு

1965ம் ஆண்டுதபாற்தந்தி தந்தியாளர்கள் பரீட்சையில் பின்வருவோர் நியமனம்பெறுவதற்கு தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

கே. அருணாசலம், எஸ். சி. அருந்தவராசா, பி. இரத்தினசபாபதிஐயர், எம். இராசகுலேந்திரன் ஆர். இராசகோபால், பி உமாபதிசிவம், எஸ், கணேசமூர்த்தி கே. கனகராசா, எஸ் கிருஷ்ணமூர்த்தி, சி. எக்ஸ் கிறிசந்தம், எம். சண்முகம், எஸ். சிவஞானசுந்தரம் எஸ். சிவராஜசங்கம், வீ சிறிஸ்கந்தராசா. எஸ் சுந்தரமூர்த்தி, கே. செல்லத்துரை எஸ். சோமஸ்கந்தன், கே. தர்மலிங்கம்.

எஸ். தர்மலிங்கம், வி. தனபாலசிங்கம், எஸ். தாமோதரநாதன், எஸ், திலகரத்தினம், எஸ். துரைராசா வீ. நடராசா, பீ. பத்மநாதன், வி. எஸ். பராசசிங்கம், வீ. பூரணம்பிள்ளை, எம். பொன்னம்பலம், வீ. மாணிக்கராசா, ரி முத்துக்கிருஷ்ணன், ஏ. யேசுராசா, ஏ. யோகமூர்த்தி. பி யோகராசா, கே விமலநாதன்.

எஸ். வேலாயுதம், வீ. வேலாயுதபிள்ளை, எஸ். ஜெயரத்தினம்

எஸ். இராஜநாயகம், வி. இராஜரட்ணம, எஸ். இலகுப்பிள்ளை எ. எம். கந்தப்பு, வி. கிருஷ்ணபிள்ளை, வி. சண்முகலிங்கம், எஸ். சந்திரசேகரம்பிள்ளை, வி. செல்லையா, கே. செல்வராஜா, வி ஞானமாணிக்கம். எம தெட்சணாமூர்த்தி, எம். வி. நித்தலவன், வி. பரமசாமி, இ புவனேந்திரன், எஸ். ஏ வேதநாயகம், எம். வேலுப்பிள்ளை.

ஊவா கல்லூரியில்

## தமிழ் விழாவுக்கு தடை உத்தரவு?

கொஸ்லாந்தை, ஞாயிறு

பதுளை ஊவாக் கல்லூரியில்வழக்கமாகநடைபெறும் தமிழ் விழாவை இம்முறை கொண்டாடுவதற்குப் பல தடைகள்எதிர்நோக்கியிருப்பதாகத் தெரியவருகிறது.

வருடா வருடம் நவம்பர் முதல் வாரத்தில் அல்லது அக்டோபரில் கொண்டாடப்பட்டுவரும் இத்தமிழ் விழா இதுவரை கொண்டாட எதுவித முயற்சியும் எடுக்கப்படவில்லை.

வழக்கம்போல தமிழ் மாணவர்கள் தமிழ் விழாக் கொண்டாட அனுமதியளிக்கும்படி பதுளைசமூகசேவைச் சங்கத் தலைவர் திரு. தங்கராசன் கல்விமந்திரி திரு. ஐ. எம். ஆர். ஏ. இரியகொல்லைக்கும், ஊவாக் கல்லூரி அதிபர் திரு. சில்வாவுக்கும் கடிதங்கள் எழுதியுள்ளார்.

தமிழ்விழா ஏற்பாட்டைப் பற்றி தமிழ் ஆசிரியர்கள் எதுவித முடிவுக்கும் வர முடியாமல் இருப்பதாகவும் தெரிகிறது.

உருளைக்கிழங்கு

## உற்பத்தியை அதிகரிக்க முயற்சி

சுழிபுரம், ஞாயிறு

சுழிபுரப் பகுதியில் உருளைக்கிழங்குச் செய்கை சம்பந்தமாகப் பிரசாரம்செய்வதற்குச் சுழிபுரம் மேற்கு பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தினர் முயற்சி மேற்கொண்டுள்ளனர். வலி. மேற்கு விவசாய விஸ்தரிப்பு உத்தியோகஸ்தர் திரு. மி. குமாரவேல் இம்மாதப் பிற்பகுதியில், சுழிபுரம் மேற்குப் பலநோக்குக் கூட்டுறவுச் சங்க மண்டபத்தில் நிலை அங்கத்தவர்களுக்கு உருளைக்கிழங்கு, பம்பாய் வெங்காயம் பயிரிடுதல் ஆகியவை குறித்து விரிவுரை நிகழ்த்துவார்.

## கொரில்லா போரில் பயிற்சி

மியாமி (புளோரிடா) நவ. 29

ஆபிரிக்கர், ஆசியர், லத்தீன், அமெரிக்கர் ஆகியோரை கொரில்லாப் போர் முறைகளில் பயிற்சியளிக்க விசேஷ கல்லூரிகளை கியூபா நிறுவிவருவதாக ஹவானா ரேடியோ தெரிவித்தது. மூன்று கண்டங்களிலும் ஏகாதிபத்திய எதிர்ப்பு இயக்கத்தின் அபிவிருத்திக்கு இக்கல்லூரிகள் குறிப்பிடத்தக்க சேவை ஆற்றமுடியும் எனவும் அறிவிக்கப்பட்டது.

(பி. டி. ஐ.)

## நவாலியில் கி. மு. விழா

நவாலி, ஞாயிறு

நவாலியில் கிராம முன்னேற்றவிழா அடுத்தமாதம் இறுதியில் நடைபெறவிருக்கிறது. இவ்விழாவில் அரசாங்க இலாகாவின் கமத்தொழில், சுகாதார, கைத்தொழிற் பொருட்காட்சிகள் நடைபெறும்.

கால் நடைகளுக்கான போட்டிகள், கலைநிகழ்ச்சிப் போட்டிகள், விளையாட்டுப் போட்டிகள் ஆகியன இந்த விழாவையொட்டி நடாத்தப்படுகிறது. போட்டிகளில் பங்குபற்ற விரும்புவோர் நவாலி கிராமமுன்னேற்றச்சங்கச் செயலாளர் திரு. டபிள்யூ. எஸ். தேவகடாட்சத்துடன் தொடர்பு கொண்டு பெற்றுக் கொள்ளலாமென அறிவிக்கப்பட்டுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 'மனிதகுலம் நிம்மதியாக வாழ சமாதானம், ஒற்றுமை அவசியம்

## சண்டை, சச்சரவு அழிவுப் பாதைகளுக்கு வழிவகுக்கிறது'

### செக். அதிபர், இந்திய ஜனாதிபதி வலியுறுத்து

புதுடில்லி, நவ. 20

மனித குலம் நிம்மதியாக வாழ்வதற்கும், உலகம் பத்திரமான பாதையில் செல்வதற்கும் சகல நாடுகளுக்கிடையேயும் சமாதானமும் பரஸ்பர ஒற்றுமையும் நிலவ வேண்டுமென செக்கோஸ்லேவேக்கிய அதிபர் திரு. நொவாட்னியும், இந்திய ஜனாதிபதி டாக்டர் ராதாகிருஷ்ணனும் வலியுறுத்தியுள்ளனர்.

முதற் தடவையாக இந்தியாவுக்கு விஜயம் செய்துள்ள செக்கோஸ்லேவேக்கிய அதிபருக்கு டாக்டர் ராதாகிருஷ்ணன் நேற்றிரவு விருந்துபசார மொன்றை அளித்தார்.

**வரவேற்பில் பெருமிதம்**

ஜனாதிபதி டாக்டர் ராதாகிருஷ்ணன், செக். அதிபரை வரவேற்றும் பேசுகையில், சமாதானத்தில் அக்கறை கொண்டுள்ள ஒரு நாட்டின் தலைவரை சமாதான சகவாழ்வையே தனது கொள்கையாகக் கொண்டுள்ள இந்தியா வரவேற்பதில் பெருமிதமும் பூரிப்புமடைகிறதென்றார்.

**ஆக்கப் பாதையில் செல்ல வேண்டும்**

"உலகத்தை சீரான பாதையில் கொண்டு சென்று, உலக நாடுகளின் முன்னேற்றத்துக்காக உழைக்க வேண்டிய வல்லரசுகளும், முக்கிய நாடுகளும் இன்று ஆக்கப் பாதையை விட்டு அழிவுப் பாதையையே நோக்கிச் சென்று கொண்டிருக்கின்றன. இந்தப் பாதை நீண்டு கொண்டு போனால், விளைவு பேராபத்தாகும். ஆகையால் உலக நாடுகள் சமாதானப்பாதையிலே சென்று ஆக்கத்துக்கு வழி தேடிக் கொள்ள வேண்டும். இந்தப் பாதையில் இந்தியா போன்றே செக்கோஸ்லேவேக்கியாவும் சென்று கொண்டிருப்பது பாராட்ட வேண்டியதே" என்று ஜனாதிபதி டாக்டர் ராதாகிருஷ்ணன் பேசுகையில் கூறினார்.

**மனிதர்களாக வாழ...**

"உலக நாடுகளிலுள்ள ஒவ்வொரு மனிதர்களும், மனிதர்களாக வாழுவதற்கு சமாதானமும் ஒற்றுமையும் அவசியம். சண்டையும் சச்சரவும் மனிதர்களை மிருகங்களாக்குவதற்கு வழி வகுக்கும்" என்றும் ஜனாதிபதி கூறினார்.

செக்கோஸ்லேவேக்கிய அதிபர் திரு. நொவாட்னி ஜனாதிபதியின் பேச்சுக்குப் பதிலளித்துப் பேசினார்.

**கொள்கையில் வேற்றுமையில்லை**

இந்தியாவும் செக். நாடும் பல்வேறு துறைகளில் நட்பும் உறவும் பூண்டிருக்கின்றது. கொள்கைகளிலும் இரு நாட்டுக்கும் அவ்வளவு தூரம் வித்தியாசமில்லை. எனது இவ்விஜயத்தால் இந்தியாவுக்கும், செக்குக்குமிடையில் மேலும் நெருங்கிய உறவு ஏற்படுவதற்கு வழி பிறக்கிறது" என்று செக். நொவாட்னி கூறினார்.

அவர் மேலும் பேசுகையில், இந்தியாவின் சமாதானக் கொள்கையையும், மனிதர்கள் நிம்மதியாக வாழ்வதற்கு இந்தியா கொண்டுள்ள உயர்ந்த லட்சியங்களையும் தாம் வரவேற்பதாகவும் சொன்னார்.

**உள்விவகாரத்தில் தலையிடுவது சமாதானத்துக்கு பங்கம்**

"மற்ற நாடுகளின் உள் விவகாரங்களில் வேற்று நாடுகள் தலையிட்டுக் கொள்வது சமாதானத்துக்கும், ஒற்றுமைக்கும் பங்கம் விளைவிக்கும் செயலாகும். செக். போன்றே இந்தியாவும் உள் விவகாரங்களில் தலையிடக் கூடாதென்ற கொள்கையைக் கொண்டிருப்பது பாராட்டக் கூடியதே" என்றும் திரு. நொவாட்னி கூறினார்.

பிரதமர் ஸ்ரீமதி இந்திரா காந்தி நேற்று அதிபர் நொவாட்னியைச் சந்தித்து சில நிமிட நேரம் தமது மகிழ்ச்சியைத் தெரிவித்துக் கொண்டார்.

ஜனாதிபதி டாக்டர் ராதாகிருஷ்ணனுக்கும் அதிபர் நொவாட்னிக்குமிடையில் இன்று முறையான பேச்சுவார்த்தை நடைபெறுகிறது.

## பாரதத்துக்கு சோவியத்தின் அன்பளிப்பு

புதுடில்லி, நவ 20

ஐந்து பெரிய விவசாயப் பண்ணைகளுக்கு ஏற்றசகல விவசாய யந்திரங்களையும் சோவியத் யூனியன் பாரதத்துக்கு அன்பளிக்க முன்வந்துள்ளது.

பிரதமர் ஸ்ரீமதி இந்திரா காந்திக்கு ரஷ்யப் பிரதமர் கொஸிஜின் எழுதியுள்ள கடிதமொன்றில் இந்த அன்பளிப்புப்பற்றிய விபரம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## இரட்டைக்குழந்தைகள் இறந்தன

சைகோன், நவ. 20

நெஞ்சு, வயிற்றில் ஒட்டிப்பிறந்த இரட்டைக் குழந்தைகள் பிறந்து 60 மணித்தியாலங்களின் பின் இறந்தன. ஆஸ்பத்திரியின் கடமையாற்றும் உத்தியோகத்தர்கள், அவ்விரு குழந்தைகளுக்கும் பொதுவாக ஒரே ஈரல் இருந்ததாகவும், அதைப் பிரிக்கும் முயற்சி இதனால் தவிர்க்கப்பட்டதாகவும் தெரிவித்தனர்.

(பி. டி. ஸி.)

## 600 பேருக்கு இலவச உணவு

சென்னை, நவ. 20

வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட சுமார் 600 பேருக்கு மந்திரி வெங்கட்ராமன் முன்னிலையில் இங்கு உணவு வழங்கப்பட்டது.

## இலங்கையருக்கு உயர் பதவி

புதுடில்லி, நவ. 20

இலங்கையின் சுதந்திர சிங்களத் தினசரிப்பத்திரிகையான 'தினமின' வைச் சேர்ந்த திரு. ஈ. எம். விக்ரமசிங்க, சர்வதேச பத்திரிகையாளர் சங்கத்தின் தலைவராகத் தெரிவு செய்யப்பட்டுள்ளார். இப்பதவியை வகிக்கும் முதலாவது ஆசிரியர் இவரே.

(பி. டி. ஸி.)

## பிரிட்டனில் அயூப்கான்

லண்டன், நவ. 20

பிரிட்டனுக்கு விஜயஞ் செய்துள்ள பாகிஸ்தான் ஜனாதிபதி அயூப்கான், தனது விஜயத்தின் இரண்டாவது நாளன்று எஞ்ஜினியரிங் தொழிலில் இளைஞர் பங்குபற்ற ஊக்களிக்கும் பொருட்காட்சி ஒன்றைத் திறந்துவைத்தார். இப்பொருட்காட்சி எலிசபெத் ராணியினாலேயே திறந்து வைக்கப்படவிருந்தது. ஆனால், தானும் தமது கணவரான எடின்பரோ கோமகனும் அயூப்கானின் இருபக்கமும் அமர்ந்திருக்க, ஜனாதிபதி அயூப்கானைக்கொண்டு பொருட்காட்சியைத் திறந்துவைக்க எலிசபெத் ராணி ஏற்பாடு செய்தார்.

(பி. டி. ஸி.)

## கார் விபத்தில் மரணம்

மாஸ்கோ, நவ. 20

சோவியத் கம்யூனிஸ்ட் கட்சியின் உயர்தர அதிகாரி ஒருவரான திரு. யஸ்குலி குடாய்பெத்யெவ் என்பவர் கார் விபத்தொன்றில் மரணமானார்.

(பி. டி. ஸி.)

## பிரதமர் இந்திராவின் வறட்சநிதி

புதுடில்லி, நவ. 20

தமது பிறந்த தினத்தைக் கொண்டாடிய இந்தியப்பிரதமர் திருமதி இந்திரா காந்தி வறட்சிக் கொடுமையினால் பாதிக்கப்படும் மக்களுக்கு உதவிகள் அளிக்கும்பொருட்டு நேற்று ஒரு நிதியொன்றை ஆரம்பித்துள்ளார். பலவரை சுமார் 40,000 ரூபா ரொக்கப்பணமாக இந்த நிதிக்குச் சேர்ந்துள்ளது. ராஷ்டிரபதி டாக்டர் ராதாகிருஷ்ணன் நேற்று பிரதமரின் இல்லத்துக்குச் சென்று வாழ்த்துத் தெரிவித்து 5000 ரூபாவுக்கு ஒரு காசோலை வழங்கினார். உபராஷ்டிரபதி டாக்டர் ஸாகிர் ஹுஸைன்

## இலட்சம் ரூபாய் இலக்கியப்பரிசு!

புதுடில்லி, நவ. 20

பிரபல மலையாளக் கவிஞர் சங்கரகுறுப்புக்கு வழங்கப்பட்ட இலட்சம்ரூபாய் இலக்கியப்பரிசு நேற்று இங்கு வழங்கப்பட்டது.

கல்கத்தா கலாசார இலக்கியக் குழுவினர் இந்தப் பரிசை இவருக்கு வழங்கினர். 'குடக்குழல்' என்ற நூலுக்காக இவருக்கு இப்பரிசு அளிக்கப்பட்டது.

1927லிருந்து 1959 வரையில் இதுபோன்ற கவிதை நூல் ஒன்று வெளிவரவில்லையென இந்தப் பரிசை வழங்கிய இலக்கியக் குழுவினர் தெரிவித்துள்ளனர்.

## பிரதமர் சுகார்டோ உயிர் தப்பினர்

### அதிபர் சுகர்ணோ ஆதரவாளர்களின் சதிமுயற்சி முறியடிக்கப்பட்டது

ஜகர்த்தா, நவ. 20

இந்தோனேஷியா பிரதமர் சுகார்டோ தமக்கு நேர இருந்த பேராபத்திலிருந்து தப்பித்துக் கொண்டார். அதிபர் சுகர்ணோவின் ஆதரவாளர்கள் இவரைக் கடத்திச்சென்று கொலைசெய்யத் திட்டமிட்டிருந்தார்களாம்.

சமீபத்தில் மதம் சம்பந்தமாக ஜனாதிபதி மாளிகையில் நடந்த ஒரு பொதுக் கூட்டத்தில் சுகர்ணோவுக்கும், சுகார்டோவுக்குமிடையில் கடுமையான 'மோதல்' ஏற்பட்டதைத் தொடர்ந்தே இந்த சதிமுயற்சி நடந்ததாகக் கூறப்படுகிறது.

ஜெனரல் சுகார்டோவையும், மற்றும் சில முக்கிய அதிகாரிகளையும் கடத்திச் சென்று கொலை செய்வதற்கு 1200 அதிகாரிகள் தயாராக இருந்தார்களாம்.

இவர்களது சதிபற்றிய தகவல் கிடைத்ததையடுத்து, சதிசெய்ததாகக் கூறப்படும் ராணுவ அதிகாரி மூகர்ஜித்தி உட்பட இருபதுக்கும் அதிகமானவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

ராணுவப் பொலிஸாரின் தீவிர நடவடிக்கையைத் தொடர்ந்தே இந்தச் சதிமுயற்சி முறியடிக்கப்பட்டதாகச் செய்திகள் தெரிவிக்கின்றன.

## கருணை காட்டும்படி கேட்கிறார் சுபாந்திரியோ

ஜாகர்த்தா, நவ 20

மரணதண்டனை விதிக்கப்பட்டுள்ள முன்னாள் இந்தோனேஷிய வெளியுறவுமந்திரி டாக்டர் சுபாந்திரியோ தமது விஷயத்தில் கருணை காட்டும்படி அதிபர் சுகர்ணோவிடம் கேட்டுக் கொண்டிருப்பதாக அறிவிக்கப்பட்டது.

அரசாங்கத்தைக் கவிழ்க்க புரட்சிசெய்ததாக குற்றம் சாட்டப்பட்டு, விசேஷ இராணுவ நீதிமன்றத்தில் நிறுத்தப்பட்ட முன்னாள் இந்தோனேஷிய வெளியுறவு மந்திரி டாக்டர் சுபாந்திரியோவுக்கு மரணதண்டனை வழங்கப்பட்டிருந்தது. இந்த மரணதண்டனையை இல்லாமல்செய்வதற்கு கொஞ்சம் கருணை காட்டும்படி அதிபர் சுகர்ணோவை வேண்டியுள்ளார்.

இந்தத் திடீர் புரட்சி சம்பந்தமாக மற்றும் இருவருக்கு மரணதண்டனை வழங்கப்பட்டிருந்தது. இவர்களும் சுகர்ணோவுக்கு கருணை மனு அனுப்பியிருந்தனர். சுகர்ணோ இன்னும் எவ்வித முடிவும் செய்யவில்லையாம்.

இதற்கிடையில் அதிபர் சுகர்ணோவை, இந்தோனேஷிய இராணுவ உயர் அதிகாரி நசூதியான், சில தினங்களுக்கு முன்னர் எச்சரிக்கை செய்திருந்தார். அரசாங்கத்தைக் கவிழ்க்க நடந்த புரட்சிசம்பந்தமாக விளக்கம் தரவேண்டுமென அவ் எச்சரிக்கையில் சுகர்ணோ கேட்கப்பட்டிருந்தார்

## இராணுவ தளபதி ராஜினாமா

வியன்டைன். நவ. 20

லாவோஸ் நடுநிலைமை இராணுவ கிடைத்தளபதி ஜெனரல் காங்கி தமது பதவியை ராஜினாமாச் செய்துள்ளார். இவர் தமதுவிடுமுறையைக் கழிக்க இந்தோனேஷியா செல்வாரென்று தெரியவருகிறது.

## காஷ்மீரில் கதிரியக்கம்

### சீனு வெடித்த அணு ஆயுதத்தால்?

ஜம்மு, நவ. 20

காஷ்மீரின் குல்மார்க் பிரதேசத்தில் புதிதாக விழுந்த உறைபனியில் கதிரியக்கத் துகள்கள் இருப்பதாக தெரியவந்துள்ளது.

சாதாரண காஸ்மிக் கதிரியக்கத்தைப் பார்க்கிலும், 40 மடங்கு அதிகமான கதிரியக்கம் உறைபனிகள் இருப்பதாக விஞ்ஞானிகள் கண்டுபிடித்துள்ளனர்.

சமீபத்தில் சீனர்கள் டாவ்லா மாகாண பாலைவனத்தில் நடாத்திய அணு ஆயுத வெடிச்சோதனையின் விளைவாக இந்த கதிரியக்க துகள் காற்றிலே அடிபட்டு இங்கு வந்திருக்கலாமென நம்பப்படுகிறது.

சீனர்கள் சமீபத்தில் நடாத்திய சோதனை இடம் குல்மார்க்கிலிருந்து 600 மைல் தூரத்திலுள்ளது.

## ஜனாதிபதி ஜோன்ஸன் இல்லம் சென்றார்

வாஷிங்டன், நவ. 20

வயிற்றிலும் தொண்டையிலும் சத்திர சிகிச்சை செய்துகொண்ட அமெரிக்க ஜனாதிபதி ஜோன்ஸன் நேற்று ஆஸ்பத்திரியிலிருந்து டெக்ஸாஸிலுள்ள தமது இல்லத்துக்குச் சென்றார். ஜோன்ஸனின் உடல்நிலை திருப்திகரமாக இருப்பதாக டாக்டர்கள் தெரிவித்துள்ளனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மணிவாக்கு

வழிபாடுதான் சமயத்தின் ஆன்மா, அதன் சாரம், சமயம் இன்றி எந்த மனிதனும் வாழ முடியாது. ஆகையால் வழிபாடுதான் மனித வாழ்க்கையின் இதயம் போன்றது.

—மகாத்மா காந்தி


# ஈழநாடு

EELANADU National Tamil Daily: Post Box CHUNNAKAM.
Telegrams: EELANADU Jaffna: Telephone 339

யாழ்ப்பாணம் பராபவ ஆண்டு கார்த்திகை மீ 6 உ. (21-11-66)


## இந்து சமூக குறைகள்

தலைப்பைப் பார்த்ததும் 'இதைத்தவிர எழுதுவதற்கு வேறு விஷயம் கிடைக்கவில்லையா?' என்று வாசக நேயர்கள் சிலர் அலுத்துக் கொள்ளலாம். சில தினங்களுக்கு முன்னரும் இதே விஷயம் பற்றி நாம் இப்பத்தியில் எழுதியிருந்த போதிலும் இன்றும் இதே விஷயம் பற்றி எழுதுவதற்காக நாம் வாசக நேயர்களிடம் மன்னிப்புக் கோரப் போவதில்லை. காரணம் நேற்றைய 'ஈழநாடு' பத்திரிகையில் 'தமிழன்' எழுதியிருந்த ஒரு கட்டுரையில் குறிப்பிட்டிருந்தது போல, சாதிப்பாகுபாடு குறிப்பாக தமிழ் சமூகத்தையும் பொதுவாக இலங்கையையும் பாதிக்கக் கூடிய முக்கிய விஷயமாக இருப்பதுதான்.

சாதிப் பாகுபாட்டுப் பிரச்சினை சமூக வாழ்க்கையோடு பின்னிப்பிணைந்திருப்பது நம்மக்களின் சமூக பொது அரசியல், சமய பொருளாதார விஷயங்களைப் பாதிப்பதாக இருப்பது. சாதிப்பாகுபாட்டை, சமூக ஏற்றத் தாழ்வுகளை நீக்கவேண்டுமென்பதில் இன்று அபிப்பிராய பேதம் அதிகமில்லை. சமய, சமூக, அரசியல் ஸ்தாபனங்கள் இதை ஒப்புக்கொள்கின்றன. இவற்றை எப்படி நீக்குவது என்பதில்தான் கருத்துவேறுபாடு இருக்கிறது. மனிதனுக்குள் மனிதன் வேறுபாடு காட்டுவது இங்கு மட்டும் தான் புதுமையானதல்ல. தென்னாபிரிக்காவில் இன ஒதுக்கல் கொள்கை வெளி வெளியாக இருக்கிறது. ஆஸ்திரேலியா முதலிய மற்றும் நாடுகளில் இந்த ஒதுக்கல்கொள்கை மறைமுகமாக இருக்கிறது. சமய, சமூகங்களுக்கிடையிலும் இவ்விதவேறுபாடுகள் உலகின் பல பாகங்களிலும் நிலவுகின்றன. இலங்கையில் சிங்கள, பௌத்த சமூகத்திலும் கூட இந்தப்பாகுபாடு இல்லையென்று சொல்லமுடியாது. இதர நாடுகளிலும் சமூகங்களிலும் 'பாகுபாடு' இருப்பதால் இந்து சமயத்திலும் சாதிப்பாகுபாடு இருக்கத்தான் வேண்டும் என்று நாம் பாகுபாட்டு முறைக்கு 'சப்பைக் கட்டுக் கட்ட' முன்வரவில்லை. இந்துசமயத்திற்கு சாபத்தீடாக இருக்கும் தீண்டாமைக்கொடுமைப் பிரச்சினைக்கு ஒரு முடிவு காண வேண்டியது அவசியம். இப்பணியில் ஈடுபடமுன் வரவேண்டியது இந்து சமயத்தினர் தான். இந்து சமயத்தவர்செய்தபாவத்திற்கு இந்துசமயத்தவரே பிராயச்சித்தம் செய்யவேண்டும். இதுவே மகாத்மா காந்தியின் கருத்துமாகும். நேற்றைய கட்டுரையில் 'தமிழன்', "இந்து சமூகம் தீர்மானிக்க வேண்டிய சில அவசர விஷயங்கள்" பற்றிக் குறிப்பிடுகையிலும் இதையே வலியுறுத்தியுள்ளார்.

சமூகக் குறைபாடுகளை நீக்குவதற்கான வழி வகைகளை ஆராயும் பொருட்டு நேற்று முன் தினம் நடைபெற்ற பல அரசியல் கட்சிகளையும் கொண்ட ஒரு கூட்டத்தில் குழு ஒன்று தெரிவு செய்யப்பட்டதுடன் தொகுதிவாரியாக உப குழுக்களையும் தெரிவு செய்வதென்று தீர்மானிக்கப்பட்டது. சமூக ஏற்றத்தாழ்வுகளை ஒழிக்க வேண்டுமென்பதில் அரசியல் கட்சிகளுக்குள் வேறுபாடு இல்லையென்பதை அந்தக்கூட்டம் உணர்த்தியிருக்கிறது. இது மகிழ்ச்சிக்குரியதாகும்.

இப்பொழுதுள்ள சமூகக் குறைபாடுகளை நீக்குவதற்கான சட்டம் சரியாக இல்லையென்றும் அதில் திருத்தம் செய்வதற்கு வழி வகை கூற வழக்கறிஞர் குழுவொன்றை நியமிக்கலாமென்றும் சர்வகட்சிக் கூட்டத்தில் உடுப்பிட்டி எம்.பி. நல்ல யோசனை தெரிவித்திருந்தார். சமூகக் குறைபாடுகளை நீக்குவதற்கு அரசியல் கட்சிகளும் அரசியல் வாதிகளும் சட்டரீதியான நடவடிக்கைகளை எடுப்பதே மிகப்பொருத்தம். இப்பொழுதுள்ள சட்டம் ஆலயப் பிரவேசத்துக்கு அனுமதியளிப்பதாக இல்லை. இது தவிர சட்டத்தில் மேலும்பலகுறைகள் உள்ளன. இவற்றை நீக்க, ஆலோசனையின் பின் பார்லிமெண்டில் தகுந்த நடவடிக்கை எடுக்கலாம்.

ஒரு சமூகத்தைச் சேர்ந்த பிரச்சினைகளை, அதுவும் ஒன்றாக வாழ்ந்து வரும் மக்களின் பிரச்சினைகளை, அவசரப்பட்டுத் தீர்ப்பது சுலபமல்ல. அமைதியாக, நிதானமாக இவற்றுக்கு முயற்சிசெய்யவேண்டும். ஆனால் அதற்கும் நத்தை வேகம் என்று அர்த்தம் கொள்ளலாகாது.

## புதிய பட்ஜட் மீண்டும் பரிசீலனை

திருநெல்வேலி, திங்கள் யாழ். மாநகரசபையின் புதிய பட்ஜட் இன்று மீண்டும் பரிசீலனைக்காக எடுத்து கொள்ளப்படும். உள். நாட்டு ஆணையாளர் திரு பெர்ஞண்டோ தலைமையில் இம்மாதம் 14-ந் திகதி பரிசீலனை செய்யப்பட்ட புதிய பட்ஜட் இன்று மீண்டும் பரிசீலனைக்காக எடுத்துக் கொள்ளப்படுவதால் திரு. பெர்ஞண்டோ இன்று காலை விமானம் மூலம் யாழ்ப்பாணம் வந்துசேருவார்.

மாநகரசபை விசேஷ கமிஷனர்களான திருவாளர்கள் நடேசன், எஸ். இ. மாணிக்கவாசகர், ஆணையாளர் ஹட்சன் செல்வராஜா ஆகியோரும் கூட்டத்துக்குச் சமூகமளிப்பார்கள். இன்று காலை பட்ஜட் பரிசீலனை தொடர்ந்து நடைபெறும்.

# -சைவப்பெருமக்களுக்கு ஒரு வேண்டுகோள்-

'சைவசமய சமரச சங்கம்' என்னும் பெயரில் ஆலயப் பிரவேசத்தை நோக்கமாகக் கொண்டு ஒரு சங்கம் அமைக்கப் பெற்றுள்ளது. சைவப் பெருமக்களுக்கு அந்தச் சங்கம் விடுத்துள்ள உருக்கமான வேண்டுகோள் இது:-

எமது சைவசமயம் மிகவும் பழமை வாய்ந்தது. "தாழ்வெனும் தன்மை பூண்டு சைவமாம் சமயம் சாரும் ஊழ்பெறலரிது" என்ற திருவாக்கின்படி, ஒருவன் சைவசமயத்திற் பிறப்பதே சிறந்த பெரும் பேறாகவும் மதிக்கப்பட்டிருக்கிறது. இச் சைவசமயத்திற் பிறந்திருக்கும் நம்மக்கள் பல்லாண்டு காலம் பலவகையான சமூகக் கஷ்டங்களை அனுபவித்து வந்தார்கள் என்பது மெய்யே. இக்கஷ்டங்களினின்றும் மீளலாம் என்று கருதிய ஒரு சாரார் வேறு சமயங்களைத் தழுவிக் கொண்டனர். ஆயினும் எமது ஆட்களுள் பல்லாயிரக் கணக்கானவர்கள் சைவசமயத்தில் வைத்த பற்றினாலும் சமயம் மாறாமல் உரிமைகளைப்பெறுவதுதான் சிறப்பு என்ற துணிவினாலும் 'கட்டுண்டோம் பொறுத்திருப்போம் காலம் மாறும்' என்ற ஆன்றோர் வாக்கில் நம்பிக்கை வைத்தபடியினாலும் நெடுங்காலம் பொறுத்திருந்து வருகின்றனர். ஆனால் காலமும் மாறத் தொடங்கிவிட்டது. கைவிடமாட்டீர்கள் என்றே கருதுகின்றோம்.

பாலின்றித் தவித்த இழந்த 12 பன்றிக் குட்டிகளுக்குத் தாயாகிப் பாலூட்டிய சிவனை — பிரசவ வேதனையின்போது மருத்துவத் தாயாகி வந்து உதவிசெய்த சிவனை — மலடிக் கிழவிக்காக மண் சுமந்து அடிபட்ட சிவனை - வணங்கி வருகின்ற சைவ மக்களிடம் கருணையில்லாமற் போகவே முடியாது.

அந்நிய சமயத்தவர்களும், அரசியற் புரட்சியாளர்களும் சத்தியாக்கிரகத்தின்மூலம் ஆலயப் பிரவேச உரிமை பெறலாம் என்று துணிவது பொருத்தமற்ற செயல் என்பதை எண்ணியும் சத்தியாக்கிரகத் தந்தையாகிய காந்தியடிகளின் கருத்தும் இதுவேயெனத் தெளிந்தும் சைவசமய சமரச சங்கத்தை நிறுவலானோம். இச்சங்கமானது சைவப் பிரமுகர்களையும் ஆலய அதிகாரிகளையும் சைவத் தாபனங்களையும் நேரிலே கண்டும் மாநாடு கூட்டியும் சைவப் பொது உரிமைகளை நம் சமூக மக்களும் பெறுவதற்கு, அமைதியான முறையில் பணி புரியும்.

மேலும். சைவசமயத்துக்குரிய வேதாகம சைவசித்தாந்த நூல்கள் பிறந்த இந்தியாவிலே, பிராமணர்களும் முன்னின்றே ஆலயப் பிரவேசத்தை நடைபெறச் செய்தனர். யாழ்ப்பாணத்தில் ஆகம முறைப் படி நடைபெறும் நல்லூர் முருகன் கோயில், வண்ணை வைத்திஸ்வரன் கோயில், பெருமாள் கோயில், முதலியனவும் திறக்கப்பட்டுவிட்டன. இவைகளிலும்மேலாக சம்பந்தர், சுந்தரர் என்னும் நாயன்மார்களின் தேவாரப் பாடல்பெற்ற திருக்கேதீச்சரம் சிவன் கோவிலிலும் ஆரம்பத்திலேயே பிரவேச உரிமை வழங்கப்பட்டிருக்கிறது.

இவைகளையெல்லாம் நன்கு அறிந்திருக்கும் நம் சைவப் பெருமக்கள் ஆலயப் பிரவேச ஆகமவிரோதம் என்று எண்ணமாட்டார்கள் எனவும், நல்லூர் முதலியவற்றில் நிகழ்ந்தது போல, அமைதியான முறையில் நீதியான ஆலயப் பிரவேச உரிமையைத் தாமே முன்னின்று அளிப்பார்கள் எனவும் அன்புடனும் பணிவுடனும் வேண்டுகின்றோம்.

சைவப்புலவர் இ. வல்லிபுரம், தலைவர், வதிரி; கவிஞர் மு. செல்லையா, காரியதரிசி, அல்வாய்; ஆசிரியர் கு. இ. சண்முகநாதன், தனாதிகாரி, மல்லாகம்.

அலுவலக முகவரி: காரியதரிசி, "பாரதி பவனம்", அல்வாய்.

## அனுமதி கிடைத்தது

பண்டத்தரிப்பு, ஞாயிறு இளவாலை பலநோக்குக் கூட்டுறவுச்சங்கத்திற்கான கடை, பண்டகசாலை என்பன கட்டுவதற்கு பொது மக்களின் அனுமதி பெறுவதற்காக நடைபெற்ற பொதுக்கூட்டத்தில் கட்டடங்கள் கட்டுவதற்கான காணி வாங்குவதற்கு பொதுமக்கள் அனுமதி கொடுத்துள்ளனர். கூட்டம் இளவாலை தமிழ் பாடசாலை மண்டபத்தில் நடைபெற்றது.

விரைவில் காணி வாங்கப்பட்டுக் கட்டட வேலைகள் ஆரம்பமாகவிருக்கிறது. இதுவரை காலமும் கடை, பண்டகசாலை என்பனவற்றிற்கு நிரந்தரமான கட்டடம் இருக்கவில்லை.

# முற்றத்து மல்லிகை

வீட்டு முற்றத்தில் வளர்ந்து நறுமணம் பரப்பும் மல்லிகையின் பெருமையை வீட்டுக்காரன் அதிகமாக உணர்வதில்லை. 'நம்முடைய வீட்டில் வளர்வதுதானே' என்ற ஒருவகை அலட்சியம் அவனுக்கு. புலவனுக்கு பிறந்த இடத்தில் மரியாதை கிடைப்பதும் அரிது. 'ஓஹோ, நம்ம இவரா? சிவன் தான் விட்டுத்தள்ளு' என்ற ஒருவகை அலட்சிய மனப்பான்மை ஊரவர்களிடத்தில் நிலவியிருக்கும்.

இவ்வித மனோபாவம் பொதுவாக உலகம் எங்குமே காணப்பட்ட போதிலும் நம்மவர்களிடத்தில் இது ஒரு தீராத வியாதி போல் பற்றிக்கொண்டிருக்கிறது. உள்ளூர் சரக்கை கண்டவுடனே 'தூஸு' கொட்டுவார்கள், அயலூர் சரக்கென்றால் 'ஆ ஊ' என்பார்கள். பனங்கொட்டையை பார்சல்பண்ணி, லேபல் ஒட்டு சீமையில் இருந்து அனுப்புவார்களானால் தெருவில் மாடு ஈய்த்துவிட்டுப்போன பனங்கொட்டைகள் மீது இடறிவிழுந்தடித்துக் கொண்டுபோய் அதைத்தான் வாங்குவார்கள்!

கிறது. அடுப்புவிட்டு மலரும் சிந்தனை சிதறிப்போகிறது. முற்றத்து மல்லிகையாகிவிடுகிறார்கள்.

சாகித்திய மண்டலம் என்பதாக ஒன்று இருக்கிறது. சிறந்த இலக்கியப்படைப்புகளுக்கு இம் மண்டலம் ஆண்டுதோறும் பரிசில் வழங்குகிறது. ஆனால் இதன் தேர்வுமுறைகளைப் பற்றி பலர் அதிருப்தி தெரிவிக்கிறார்கள். முகமனும் பாரபட்சமும் அங்கே தலை தூக்குகின்றன என்று புகார்கள் எழுகின்றன. இதனாலும் இளம் எழுத்தாளர்கள் மனம்ஒடிந்து போயிருக்கிறார்கள்.

இந்த நிலையில் யாழ்ப்பாணத்து உதவி உள்ளூராட்சிஆணையாளர் திரு. மாணிக்கவாசகரின் நடவடிக்கை, பாலைவனத்தில் பெய்த மழைபோல, எழுத்தாளரின் வரண்ட நெஞ்சங்களை குளிரவைத்திருக்கிறது. உள்ளூராட்சிக்குட்பட்ட சனசமூகநிலையம் போன்ற பொதுஸ்தாபனங்களில் ஈழத்து எழுத்தாளரின் நூல்களையே பொதுமக்கள் படிப்பதற்கு வைக்கவேண்டும் என்று அவர் உத்தரவிட்டுள்ளார்.

வாழ்க மாணிக்கவாசகர்கள்!

—வழிப்போக்கன்

### நாட்டிலும் நகரிலும்

ஈழநாட்டில் எத்தனையோ கவிஞர்கள் இருக்கிறார்கள், எத்தனையோ கவிதைகள் மலருகின்றன. எத்தனை எத்தனையோ கதை ஆசிரியர்களும், கலைஞர்களும் இருக்கிறார்கள். ஆனால் அவர்களுடைய படைப்புகளுக்கு உள்ளூரில் அதிகம் மவுசு கிடையாது. வெளியூரானின் தயாரிப்புகள்தான் தித்திக்கும்.

ஆயிரக்கணக்கான இளைஞர்களுக்கு எழுதவேண்டுமென்ற துடிப்பு இருக்கிறது. சிறுகதைகளையும், நாவல்களையும், கவிதைகளையும் எழுதிக் குவிக்கிறார்கள். அவற்றை அச்சில் ஏற்றி வெளியிடுவதற்கு அவர்கள் படும்பாடு பெரிய பரிதாபமாயிருக்கிறது. இதற்கு முதன்மையான காரணம் நமதுமக்கள் அவர்களுடைய சிருஷ்டிகளுக்கு காட்டும் அலட்சியமும் அவமதிப்புமே. தமது முயற்சிகள் பழுத்து பலனளியாததைக் கண்டு மனம் சோம்பி உற்சாகம் கெட்டுவிடுகின்றனர். கற்பனை ஊற்று வரண்டுவிடு

### இணைப்புக்குழுக் கூட்டம்

கிளிநொச்சி, ஞாயிறு கிளிநொச்சிப்பகுதி இணைப்புக்குழுக் கூட்டம் யாழ். அரசாங்க அதிபர் தலைமையில் நடைபெற்றது. இக்கூட்டத்தில் இப்பகுதி அபிவிருத்தி சம்பந்தமாகப் பல தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

கூட்டத்தின் பின்னர் பட்டின அமைப்பு உத்தியோகத்தரும், ஏனைய அரசாங்க உத்தியோகத்தர்களும் கிளிநொச்சி எம். பி. திரு. கா. பொ. இரத்தினத்துடன் அரசாங்க அதிபர் தலைமையில் கிளிநொச்சியிற் உதவிப் பொலிஸ்சுப்பிரிண்டன் கந்தோர், பொலிஸ் பரிசோதகர்கள் தங்கும் விடுதி நீதிமன்றம், இ. போ. ச. உத்தியோகத்தர்கள், ஊழியர்கள் தங்கும் விடுதி, மத்திய மகாவித்தியாலயம் ஆகியவை அமைக்கப்படவிருக்கும் இடங்களைப் பார்வையிட்டனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# "அரசியல் சிந்தனையை உதறித்தள்ளி உணவுப் பிரச்னையை தீர்க்குக"

## ஐ.நா.தினக் கூட்டத்தில் வில்மட்பெரேரா கோரிக்கை

குரும்பசிட்டி, ஞாயிறு

"நமது நாடு பொருளாதார நிதி நெருக்கடிகள் நிறைந்தது. மக்கள், சுமார் மூன்று மாதங்களுக்கிடையில் மேலும் பல தேசிய நெருக்கடிகள், பிரச்னைகளை எதிர்நோக்கவேண்டியவர்களாக இருக்கின்றனர். அரசியல் பிரச்னைகளைப் பற்றிய சதா சிந்தனையைவிட்டு நாட்டின்வறுமையையும் உணவுக் கஷ்டத்தையும் போக்கிக்கொள்ள மக்கள் முன்வரவேண்டும். அத்தியாவசிய உணவுப் பொருட்கள் கிடைக்காதது குறித்து மக்கள் அரசாங்கத்தின்மீது குறை கூறுகின்றனர். வேறு பல நாடுகளிலும் இவ்வகையான நெருக்கடிகள் காணப்படுகின்றன எனவே அரசகரும மொழி போன்ற பிரச்னைகளில் கவனம் செலுத்துவதை விட்டு இலங்கையின் தேசியப் பிரச்னைகளைச் சுமுகமாகத் தீர்த்துக்கொள்ள இன, மத, மொழி, சமூக வேற்றுமைகளை மறந்து மக்கள் கடமையாற்ற முன்வரவேண்டும். சிங்களவர், தமிழர், முஸ்லிம், பறங்கியர் என்ற இனப் பாகுபாடின்றி ஒரே இனத்தவர் ஒரே தேசத்தவர் என்ற கருத்தில் மக்கள் ஒத்துழைத்து செயலாற்ற வேண்டும். இதனால் எதிர்காலத்தில் நமது பிரச்னைகள் சுமுகமாகத் தீர வழி பிறக்கும்" என்று இலங்கையின் முன்னைநாள் சீனத் தூதுவரும் சம்பள நிர்ணய சபையின் தலைவராகக் கடமையாற்றியவருமான திரு. வில்மட் பெரேரா ஏழாலை மகா வித்தியாலயத்தில் சிறுவர் தினவிழாவில் பேசுகையில் குறிப்பிட்டார். ஐ. நா. தினமும் சிறுவர்தின விழாவும் வலிவடக்குக் காரியாதிகாரி திரு. ரி. முருகேசம்பிள்ளை தலைமையில் நேற்று இரவு நடைபெற்றது.

திரு. வில்மட் பெரேரா மேலும் பேசுகையில் கூறியதாவது:

"அமரிக்கர் - ரஷ்யர், இந்தியர் - சீனர், சிங்களவர் - தமிழர் என்ற இனவேற்றுமைகளை மறந்து மனித இனத்தவரில் நாமும் ஒரு பகுதியினர் என்ற உணர்ச்சி ஏற்படுதல் வேண்டும். இதனால் உலகில் ஒரு சமூகம் என்ற கருத்து நிலவி தனிப்பட்டவரினதும் சமூகத்தினதும் எண்ணங்களில் மாற்றங்கள் உண்டாகும். மனித குலத்தில் ஒவ்வொருவரும் சமம் என்னும் மனித உரிமையை மதித்தால் தான் சமாதானமும் நீதியும் உலகில் ஏற்படும். இவற்றை ஏற்காததினால் இன்று வியட்நாமில் தொடர்ந்து யுத்தம் நிகழ்கின்றது. ரொடீஷியாவில் சாதித்துவேஷமும் கலைதூக்கியுள்ளது. இந்த இரு பிரச்னைகளையும் தீர்ப்பதற்கு ஐ. நா. வுக்கு சக்தி இல்லாமல் இருக்கிறது. உலகில் கால் பங்கினர் வாழும், மக்கள் சீனாவின் பிரதிநிதித்துவம் ஐ. நா. வில் இல்லை; இதனால் ஐ. நா. வை உலக மகாசபை எனக் கூறுவதில் அர்த்தமே இல்லை. ஆயுதபரிகரணம், அணுசக்தி ஆபத்து போன்றவற்றை, சீனா ஐ. நா. வில் இடம் பெறாததினால் தீர்வுகாண முடியாமல் இருக்கின்றது. சகல பிரச்னைகளுக்கும் ஐ. நா. தீர்வுகாண இயலாது விடினும் சபையில் சகல நாடுகளுக்கும் பிரதிநிதித்தும் அளித்து ஒழுங்காக அமைப்பதினால் உலக ஒருமைப்பாட்டினை அமைக்கலாம் இவ்வகை வழி எதிர்காலத்தில் ஒற்றுமை, அமைதிநிலவும்உலக அரசு ஒன்றினை நிறுவ வழி கோலுவதாக அமையலாம்.

பிரிவினை மனப்பான்மையை வளர்க்கக் கூடாது. உலக சமாதானம், சமூக ஒற்றுமை பற்றி நாம் பிரமாதமாகப் பேசுகின்றோம். ஆனால் எம் மத்தியில் சாதிசமய துவேஷங்கள் மேலோங்கிமுன்னேற இடம் கொடுத்து வருகின்றோம். பௌத்தம் போதிக்கும் தர்மம் பகவத்கீதை எடுத்துக் காட்டும் அன்பு மார்க்கம் மற்றும் இந்து கலாச்சாரம் கூறும் சகல உயிர்களையு நேசிக்கும்பண்பு எல்லாமே ஒரு அடிப்படைக் கருத்தையே கொண்டுள்ளன. பரஸ்பர கருத்துப் பரிமாறல் மூலம் ஒருவரை ஒருவர் புரிந்து அறிந்து நம் சொந்தப்பிரச்னைகளைச்சுலபமாகத் தீர்த்துக் கொள்ளலாம்."

இவ்விழாவில் வடபகுதி உதவிவித்தியாதிபதி திரு. எஸ். தணிகாசலம் மல்லாகம் நீதிபதி திரு. டி. எஸ். நெத்தசிங்க திரு. க. சிவகுரு ஆகியோரும் உரை நிகழ்த்தினர்.

## தாக்குதல் வழக்கு: 25-ல் தீர்ப்பு

மாவிட்டபுரம், ஞாயிறு

பழை வீமன்காமத்தைச் சேர்ந்தவர்களான கந்தன் மார்க்கண்டு, கந்தன் தங்கன் கந்தன் செல்வராசன். கதிரவேலு நாகமுத்தன், சின்னவன் இராசன், கந்தன் முருகன், ஐயன் கந்தன் (இறந்துவிட்டார்), கந்தன் நடராசா ஆகிய எட்டுப்பேரும் சட்டவிரோதமாகக்கூட்டம்கூடியதாகவும். கந்தன் சின்னக்குட்டி, சின்னக்குட்டி தெய்வானை, சின்னக்குட்டி இவ பாக்கியம், சின்னக்குட்டி அருளானந்தம் ஆகியோரைத் தாக்கியதாகவும் குற்றஞ்சாட்டி காங்கேசன்துறைப் பொலிசாரால் தொடரப்பட்ட வழக்கு மல்லாகம் நீதிபதி திரு.டி.எஸ். நெத்தசிங்கா முன்னிலையில் தீர்ப்புவழங்குவதற்காக எடுத்துக்கொள்ளப்பட்டபோது நீதிபதி பொலிசார் இவ்வழக்கின் முறைப்பாட்டுக் கொப்பியை இன்னும் கோர்ட்டில் சமர்ப்பிக்காமையால் தீர்ப்பு வழங்குவதை இம்மாதம் 25-ம் திகதிக்கு ஒத்திவைத்துள்ளார்.



# ஆசிரியருக்கு கடிதங்கள்

## பச்சைஅரிசி 'கொடுமை'

பச்சையரிசி 'கொடுமை'யை இப்பகுதி மக்கள் தாங்க முடியாமல் தவித்துக்கொண்டிருக்கிறார்கள். மூன்று முறையா, நான்குமுறையா? வல்வெட்டிப்பகுதிக்கு கடந்த ஐந்து வாரங்களாகத் தொடர்ந்து கூப்பனுக்கு பச்சையரிசியே கொடுக்கப்பட்டுக்கொண்டிருக்கிறது.

இப்போது வல்வெட்டிப் பகுதியிலுள்ள ஒவ்வொரு வீடுகளிலும் ஒரு வருத்தக்காரராவது குறைந்தது இருக்கிறார்கள். காரணம்பச்சை அரிசிதான்என்கிறார்கள்! இது சரியோ தவறோ எப்படித்தான் பச்சையரிசியைத் தொடர்ந்து சாப்பிடமுடியும்? இப்பகுதி மக்களுக்கு கூப்பன் அரிசியே வேண்டாமென்றாகிவிட்டது.

இந்தப் பச்சையரிசிபற்றி பொதுமக்கள் உதவி உணவுக் கட்டுப்பாட்டு அதிகாரிக்குப்பலமுறை புகார்செய்தார்களாம்! ஆனால் எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லையாம்! இனியாவது இதுபற்றிக் கவனமெடுத்து சம்பந்தப்பட்ட அதிகாரிகள் 'பச்சையரிசிக் கொடுமை'யைப்போக்க வழிசெய்வார்களா?

சு. கனகலிங்கம்
உடுப்பிட்டி
கி. ச, அங்கத்தவர்
வல்வெட்டி
வல்வெட்டித்துறை.

ஃ ஃ ஃ

## ஒரு மன்றம் வேண்டும்

பெரும்பான்மைத் தமிழர்களும் தலைவர்களும் ஈடுபட்டு நடத்தக்கூடிய விதத்தில் கட்சிபேதம் இன்றி "சமூக சீர்திருத்த மன்றம்" என்ற பெயருடன் யாவரும் சேர்ந்த சாதிப் பாகுபாட்டை ஒழிக்கப் போராடினால் இப்பாகுபாடு விரைவில் ஒழியும். தமிழரிடம் வேற்றுமையின்றி எக்காலத்தும் ஒற்றுமை நிலவும். இவ்வாறு பரந்த அடிப்படையில் இல்லாது குறுகிய நோக்கத்துடன் "நாமே செய்தோம்" என்று அரசியல் நோக்கத்துடன் பிரசாரம் செய்தால் பிரச்னை எப்படித் தீரும்?

சி மகாலிங்கம்
யாழ்ப்பாணம்.

ஃ ஃ ஃ

## நினைவுப் பெயர்

17-11-66ல் நடந்த உடுப்பிட்டி கிராம சபைக் கூட்டத்தில் ஊரிக்காட்டில் இருந்து வல்வெட்டிக்கு நெற்காடு வைரவர் கோவில் ஒழுங்கைக்கூடாகச் செல்லும் பாதையை "பொன் கந்தையா வீதி" என்று நாமம் சூட்டும்படி நான் கொண்டு வந்த பிரேரணையை சபைத் தலைவர் ஆட்சேபித்தார். இதை எதிர்த்து 10-ம் வட்டார அங்கத்தவராகிய நான் இதை சபைக்கு விடும்படி கேட்டுக் கொண்டதற்கு இணங்க சபைக்கு விட்டபொழுது 8 வாக்குகள் சாதகமாகவும் 6 வாக்குகள் பாதகமாகவும் தலைவரும் மற்றும் எட்டு அங்கத்தவரும் வாக்கு அளிக்காது இருந்தனர். பிரேரணை நிறைவேறியது. குறிப்பிட்ட பாதை அமரர் பொன் கந்தையா அவர்களின் முயற்சியால் உருவாக்கப்பட்டது.

சி. ஈஸ்வரலிங்கப்பெருமாள்
10-ம் வட்டார அங்கத்தவர்
உடுப்பிட்டி.

## 'சிறுபான்மையினரையும் பாதுகாக்கவேண்டும்'

குருநாகலை, ஞாயிறு

"ஜனநாயகம் ஸ்திரமான பொருளாதார அடிப்படையில் தான் வங்க முடியும் ஆகையால் எங்கள் பொருளாதாரம்ஸ்திரமானதாயில்லாவிட்டால் எங்களது சுதந்திரத்திற்கு பேராபத்து ஏற்படலாம்" என்று பிரதமர் திரு. டட்லிசேனநாயகா குருநாகலையில் நடைபெற்ற கூட்டமொன்றில் பேசும்போது குறிப்பிட்டார்.

தொடர்ந்து பிரதமர்பேசுகையில் குறிப்பிட்டதாவது:-"ஜனநாயக அடிப்படையில் இயங்கும் அரசாங்கம் பெரும்பான்மை மக்களின் உரிமைகளைப்பாதுகாப்பதுடன் நில்லாது சிறுபான்மை மக்களின் உரிமைகளையும் பாதுகாக்க வேண்டும்"

துறைமுகசமாஜகருத்தரங்கு

# "வடபகுதித் தொழிலாளர்கள் கூடுதலாக வேலை செய்கின்றனர்

## கூட்டுறவு இயக்கசாதனை போற்றத்தக்கது'

யாழ்ப்பாணம், திங்.

"கொழும்புத்துறைமுகத்தில் ஏற்பட்ட வேலைநிறுத்தங்கள் காரணமாகவே கப்பல்கள் வடபகுதி துறைமுகங்களுக்கு அனுப்பப்பட்டன. எவ்வளவு கூடுதலான கப்பல்கள் வடபகுதிக்கு வருகின்றனவோ, அவ்வளவு கூடுதலாக தொழிலாளர் நன்மையடைவர்"

யாழ் மாவட்ட கூட்டுறவு துறைமுக சேவை சமாஜத்தின் இரண்டாம் நாள் கருத்தரங்கிற்கு தலைமைதாங்கிய வ. ஐ. மே. சபைத் தலைவர் திரு. இ. இராசரத்தினம் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் கூறியதாவது: "யாழ்ப்பாணத்தில் கூட்டுறவு இயக்கங்கள் பல ஆண்டுகாலமாக நல்லமுறையில் நடைபெற்றுவருகின்றது. தொழிலாளருக்கு கூட்டுறவு பற்றிய அறிவு நன்கு புகட்டப்படவேண்டும். கூட்டுறவு சமாஜத்தில் தொழிலாளர்தான் முதலாளிகள். கூட்டுறவு சங்கங்களைப்பற்றி சிலர் குறைகூறுகின்றனர். பாராளுமன்ற உறுப்பினர்களிலும் பார்க்க, கூட்டுறவு சங்க அங்கத்தினர் அதிக சேவை செய்கின்றனர். கிராம சபை, பட்டினசபைகளிலும் பார்க்க கூட்டுறவு சங்கம், மக்களுக்குச் சேவை செய்கின்றது. 40வருடகாலமாக கூட்டுறவு இயக்கம் தொழிலாளருக்கு பெரும் சேவைசெய்து வருகின்றது. இதனைப்போல் வேறு எந்த இயக்கமும் பொதுசேவை செய்யவில்லை"

உதவிஉணவுக்கட்டுப்பாட்டதிகாரி திரு. கே. சிவப்பிரகாசம் கூறியதாவது: கூட்டுறவின் மூலம் தொழிலாளர் அதிக நன்மையடைந்துள்ளார்கள், மேலும் உங்கள் ஐக்கியம் வளர தொழிலாளர் மத்தியில் ஒற்றுமை அவசியம்.

சமாஜத்தின் தலைவர் திரு. ஜே. எவ். சிக்மரிங்கம் கூறியதாவது: சமாஜத்தில்1500 உறுப்பினர்கள் இருந்த போதிலும், வடபகுதிக்கு கப்பல் வரும்போது 500 பேருக்குத்தான் வேலை கிடைக்கிறது. கப்பலிலிருந்து இறக்கப்படு... செய்ததன் மூலம் ஒரு லக்சம் ரூபா லாபம் பெற்றுள்ளோம் வடமாகாண துறைமுக தொழிலாளர் மற்றப் பகுதிகளிலுள்ள தொழிலாளரிலும் பார்க்க கூடுதல் வேலைசெய்து வருகின்றனர். 8 தடவைகள் கப்பலிலிருந்து 1000 தொன் பொருட்களை இறக்குமதி செய்துள்ளனர். இன்சூரன்ஸ்திட்டம்ஒன்றை உருவாக்க தீர்மானித்துள்ளது. இதனால் தொழிலாளர் நன்மையடைவர்.

சிரேஷ்ட கூட்டுறவு உதவி ஆக்க ஆணையாளர் திரு. ஏ. பெருமையினர் கூறியதாவது: கொழும்பு துறைமுகங்களில் நவீன வசதிகளிருந்தும்கூட, தொழிலாளர், வடபகுதி தொழிலாளர் போல் பொருட்களை விரைவாக இறக்குமதி செய்யவில்லை. இந்த சமாஜம் சில சாதனைகளை நிலைநாட்டியுள்ளது.

யாழ். கிழக்கு கூட்டுறவு ஆக்க ஆணையாளர் திரு. எம். மதிபாலசிங்கம் கூறியதாவது: சமாஜம் நிறுவப்பட்டகாலத்தில் எதிர்நோக்கியுள்ள கஷ்டங்களை மறக்க முடியாது. சமாஜத்தை குலைப்பதற்கு கொந்தராத்துக்காரர் தங்களால் இயன்றவற்றை செய்துபார்த்தார்கள். இன்று சமாஜம் நல்ல முறையில் நடைபெறுகிறது.

## 90 விக்கிரகங்களை உடைத்தனராம்

மதுரை, நவ. 20

மதுரையிலுள்ள கோயில் ஒன்றுக்குள் புகுந்து சுமார் 90 விக்கிரகங்களை உடைத்து நொறுக்கியதாக 24 வயது இளைஞர் ஒருவர் பொலிசாரால் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

## வீதி திருத்தப்படவில்லை

சுழிபுரம், ஞாயிறு

சுழிபுரம் கிராமசபையின் 5ம் வட்டாரத்தின் பிரதான வீதியின் இரு மருங்கிலும் கடந்தஒரு வருடமாக கற்கள் குவிக்கப்பட்டும் திருத்துவதற்கான வேலைகள் எதுவும் இன்னும் நடைபெறவில்லை.

மலைநாட்டில்

# தமிழ்ப்பிள்ளைகளை எதிர்நோக்கும் புதிய நெருக்கடிகள்

கொஸ்லாந்தை, ஞாயிறு

கொத்மலை கடியன்சேனையிலுள்ள சிங்கள தமிழ்பாடசாலை அதிபர் ஒரு புதிய சட்டத்தை தமிழ்ப்பிள்ளைகள் மீது விதித்துள்ளதாகக் கூறப்படுகிறது.

இதுவரை காலமும் சகல தமிழ் குழந்தைகளும் இப்பாடசாலையில் அனுமதி பெற்றுவந்தனர். ஆனால் அடுத்த வருடம் முதல் புதிதாக விண்ணப்பிக்கும் ஒவ்வொரு குழந்தையும் பிரஜாவுரிமைப்பத்திரத்தை காண்பிக்கவேண்டுமென்றுகோரப்பட்டுள்ளதுடன் விண்ணப்பப்பத்திரத்திலும் பிரஜாவுரிமை உண்டா இல்லையா என்று எழுதவேண்டுமென்ற நிபந்தனையையும் விதித்துள்ளாராம். இப்புதிய நடவடிக்கை அடுத்த வருடம் பிரஜாவுரிமையற்ற எண்ணற்ற குழந்தைகளின் கல்வியைப் பாதிக்குமென பெற்றோர் அஞ்சுகின்றனர்.

## தொழிலாளருக்கு கல்வி வசதி

கொழும்பு, ஞாயிறு

தொழிலாளர்களுக்கு தொழில் சம்பந்தப்பட்ட கல்வி புகட்டும் வகையில் தொழிலமைச்சு ஒரு நிரந்தரமான திட்டமொன்றை தயாரித்துள்ளது. இப்பகுதிக்கு திரு. டி. பாலசிங்கம் பொறுப்பாளராக நியமிக்கப்பட்டுள்ளார்.

## வெளிநாடு சென்றார்

புன்னாலைக்கட்டுவன், ஞாயிறு

ஊரெழு கிழக்கைச் சேர்ந்த திரு. சினியப்பா சண்முகநாதன் உயர்தர கல்வி காரணமாக இவ்வார இறுதியில் இங்கிலாந்துக்குப்பயணமானார். இவர் யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியின் பழைய மாணவராவார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சீனவுக்கு அதிக பொருட்கள் ஏற்றுமதி

## இலங்கை தீர்மானம்

கொழும்பு, ஞாயிறு

இலங்கைக்கும் சீனவுக்குமிடையேயுள்ள வர்த்தகம் ஒரு கோடியே 400 லட்சம் ரூபாய்க்கு விஸ்தரிக்கப்படவிருக்கிறது. இத்தொகை இவ்வருடத்தைய தொகையிலும் 150 லட்சம் ரூபாய் அதிகமானதாகும்.

இருநாடுகளுக்குமிடையேயான வர்த்தக பரிமாறல் பற்றிய ஒப்பந்தமொன்று இவ்வாரம் வர்த்தக மந்திரி டாக்டர் எம். வி.பி. பீரிஸ், சீனவின் வெளிநாட்டு வர்த்தக உதவி மந்திரி திரு லின் ஹாய் யுன் ஆகிய இருவராலும் கைச்சாத்திடப்படும். இதற்காக திரு. லின் ஹாய் யுன் இங்கு வந்து சேருவார்.

இவ்வொப்பந்தத்துக்கான விபரங்களைக் கடந்த சில வாரங்களாக இங்கு வந்துள்ள சீனதூதுகோஷ்டி ஒன்று தயார்செய்து வந்துள்ளது.

கடந்த வருடங்களைப் போல் சீன இலங்கைக்கு 200,000 தொன் அரிசி வழங்கும். இலங்கை சீனவுக்கு 1965ல் அளித்த 38,000 தொன் ரப்பரை அடுத்த வருடத்தில் 50,000 தொன்னாக உயர்த்துமென எதிர்பார்க்கப்படுகிறது. சீன-இலங்கை வர்த்தக ஒப்பந்தம் 1952-ல் கைச்சாத்திடப்பட்ட பின் இதுவேமிகப்பெரியதொகையாகும்.

நடைமுறையிலுள்ள உலகவிலைகளைப் பொறுத்து 1967-ம் ஆண்டைய ஒப்பந்தத்தில் அரிசி, ரப்பர் இரண்டினது விலையும் கூட்டப்படுமெனத் தெரிகிறது.

சீனவுக்கு அனுப்பப்படும் தேங்காய் எண்ணெய், தேயிலை, ஆகியவற்றின் தொகையையும் கூட்ட இலங்கை தீர்மானித்துள்ளது.

---

## 'குருணாகலையிலும் நிறுவுக'

கொழும்பு, ஞாயிறு

தேசிய மயசேவைகள் அமைச்சின் பாராளுமன்றக் காரியதரிசி திரு. டி பி. வெலகெதர, குருணாகலைக்கு ஒரு பல்கலைக்கழகக் கல்லூரி நிறுவும்படி கல்விமந்திரி திரு. ஐ எம். ஆர். ஏ இரியகொலையைக் கேட்டுள்ளனர். குருணாகலையின் மேயராகவும், எம். பி. யுமாகவுள்ள திரு. வெலகெதர, வடமேற்கு மாகாணத்தின் முக்கிய பட்டினமென்ற முறையில், ஏற்கனவே கல்வியமைச்சினுல் அண்மையிலுள்ள இடங்களில் தேர்ந்தெடுக்கப்பட்ட பட்டினங்களைவிட குருணாகலைக்கே முதலிடம் அளிக்கப்படவேண்டுமெனக் கூறியுள்ளார்.

---

## மண்சரிவை பயன்படுத்தும் வர்த்தகா

கொழும்பு, ஞாயிறு

அண்மையில் நடந்த மண்சரிவைப் பயன்படுத்தி பதிகொட, வெரகல வர்த்தகர்கள் பொருட்களை கூடிய விலையில் விற்று பொதுமக்களுக்கு கஷ்டத்தை உண்டாக்குகிறார்களென்று கூறு தோட்டத் தொழிலாளர் சங்கங்கள் பதுளை அரசாங்க அதிபருக்கு புகார்செய்துள்ளன.

மண்சரிவினுல் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உடனடியாக நிவாரணம் வழங்கும்படியும் இச்சங்கங்கள் சமூகசேவைப் பகுதி அதிபரை கோரியுள்ளது.

---

## தொழிலாளர்காங்கிரஸ் பிரமுகர் கவலை

கொஸ்லாந்தை, ஞாயிறு

''மேல்நாடுகளில் தொழிலாளர்களுக்கு அவர்கள் வேலைசெய்யும் தொழில் நிறுவனங்களே சலவசதிகளையும் ஏற்படுத்தி தொழிலாளர்களை விழிப்புணர்ச்சியடையச் செய்கிறது கல்வி, சுகாதாரம், குடியிருப்பு போன்றவற்றில் தொழில் நிறுவனங்கள் அதிக அக்கறை செலுத்துகின்றன ஆனல் இலங்கையில் உள்ள தொழில் நிறுவனங்களோ இதுபற்றி அதிகம் கவலைப்படுவதில்லை'' என்று இலங்கைத்தொழிலாளர் காங்கிரஸ் பிரிவுக்காரியதரிசி திரு. வி. ஆர். செவுகப் பெருமாள் கவலை தெரிவித்தார்.

தலவாக்கலை லோவி வட்டக்கொடை தோட்டில் நடைபெற்ற மாபெரும் தொழிலாளர் கூட்டமொன்றில் பேசும்போதே திரு. சேவுகப்பெருமாள் மேற்கண்டவாறு கூறினர்.

கூட்டத்தில் செல்வி எம். சங்கரவடிவு திரு. எஸ், செல்லையா, தலவாக்கலை இ தொ. கா. மாவட்டப்பிரதிநிதி திரு. ரெங்கநாதன், திரு நடேசபிள்ளை ஆகியோரும் பேசினர்.

---

## ஆரம்பவகுப்புகளில் பயிற்றப்பட்ட ஆசிரியர்

### மந்திரி உத்தரவு

கொழும்பு, ஞாயிறு

அடுத்த வருடம் ஜனவரி முதலாம் திகதியிலிருந்து நாட்டிலுள்ள 9,000 அரசாங்கப் பள்ளிக்கூடங்களும் தமது ஆரம்ப பிரிவு (சிறுவர்) வகுப்புக்களில் பயிற்றப்பட்ட ஆசிரியர்களையே வைத்திருக்கும்.

கொழும்பிலோ அல்லது நாட்டின் வேறெந்த மூலைமுடுக்கிலோவுள்ள ஒவ்வொரு பள்ளிக்கூடத்திலுமுள்ள ஆரம்பபிரிவு வகுப்புகளுக்கு பயிற்றப்பட்ட ஆசிரியர்களே நியமிக்கப்படவேண்டுமெனக் கல்வி மந்திரி உத்தரவு பிறப்பித்துள்ளார்.

பள்ளிக்கூடங்களில் இடம் காலியாகவிருந்தால், ஜனவரி 31-ல் ஐந்து வயதடையும் பிள்ளைகளை அனுமதிக்கலாமெனவும் மந்திரி அறிவித்துள்ளார்.

---

## நிவாரண உதவிகள்

### மண்சரிவினுல் பாதிக்கப்பட்டவர்களுக்கு

கொஸ்லாந்தை, ஞாயிறு

அண்மையில் அப்புத்தளை வெரகலை பதிகொடை பகுதிகளில் ஏற்பட்ட மண்சரிவினுல் வீடிழந்து தவிக்கும் குடும்பங்களுக்கு தலா 300 ரூபா கொடுப்பதற்கு சமூக சேவைகள் பகுதி நடவடிக்கை எடுத்துவருகிறது.

வீடிழந்த மக்களுக்கு தற்காலிக இடவசதியும் இலவச உணவும் வழங்கும்படி சமூகசேவைகள்பகுதிபதுளை அரசாங்க அதிபரை கேட்டுக்கொண்டுள்ளது. இம் மண்சரிவால் தந்தி, தபால் போக்குவரத்து சேவைகள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளன.

மண்சரிவால் பாதிக்கப்பட்டோருக்கு உதவும் பொருட்டு இ. தொ. கா. நடவடிக்கைகளை மேற்கொள்ளவிருக்கிறது. இதன்சுற்றுப்புறத்திலும் ஏற்படும் அபாயத்தை தவிர்க்கும் பொருட்டு இப்பகுதியில் அதிகாரிகள் விஜயம்செய்து மக்களுக்கு ஆலோசனை வழங்கி வருகிறார்கள்.

---

## பொலிஸார் தொடர்ந்த வழக்கு

திருநெல்வேலி, திங்

மதுபோதையில் யாழ்ப்பாணம் பொலிஸ் நிலயத்துக்குள் பிரவேசித்து அங்கு குழப்பம் விளைவிக்க முயற்சித்ததாகஒருஅரசாங்கஊழியர்மீதும் அவரது நண்பர் ஒருவர்மீதும் வழக்குத் தொடரப்பட்டுள்ளது.

இவ்வழக்கில் அனுராதபுரத்தில் கடமையாற்றும் நாகேந்திரா செல்வராஜா என்பவரும், அவரது நண்பரான ஊர்காவற்றுறையைச் சேர்ந்த பி. அன்ரனி என்பவரும் குடி போதையில் யாழ்ப்பாணம் பொலிஸ் நிலயத்துக்குச் சென்று அங்கு குழப்பம்செய்ய எத்தனித்ததாக பொலிஸ்சார்ஜன்ட் சுப்பிரமாநுவால் குற்றம் சாட்டப்பட்டுள்ளனர். யாழ்ப்பாணம் மாஜிஸ்திரேட் கோர்ட்டில்இவ்வழக்கு விசாரணைக்காக மார்ச் மாதம் 28ம் திகதி எடுத்துக்கொள்ளப்படவிருக்கிறது.

---

## தொடங்கஸ்லந்தா நியமனப்பத்திரம் இன்று ஏற்கப்படும்

கொழும்பு, ஞாயிறு

தொடங்கஸ்லந்தா உபதேர்தலுக்கான நியமனப்பத்திரங்கள் இன்று காலை 10 மணிக்கு குருணாகலை கச்சேரியில் ஏற்றுக் கொள்ளப்படும். இத்தேர்தலில் யாரைநிறுத்துவதென்று யூ.என்.பியால் இன்னும் தீர்மானிக்கப்படவில்லை. எஸ். எல். எப். பி திருமதி லெட்டீசியா ராஜபக்சேயை நிறுத்தத் தீர்மானித்துள்ளது. இவர்முன்னுள் எம். பி. திரு. ஆர். ஆர். டபிள்யூ ராஜபக்சேயின் மனைவியாவார்.

---

## இ. ச. தலைவர் ராஜினமா

யாழ்ப்பாணம், திங்கள்

வட்டுக்கோட்டை இராமசபைத்தலைவர் முதலியார் திரு செ. சின்னத்தம்பி சுகயீனம் காரணமாக தலைவர் பதவியிலிருந்தும் ராஜினமா செய்துள்ளார்.

தலைவர் பதவிக்கான தெரிவு விரைவில் நடைபெறும்எனத் தெரியவருகிறது.

---

## இடமாற்றம்

உடுப்பிட்டி, ஞாயிறு

பருத்தித்துறை காரியாதிகாரி கந்தோரில் பிரதம லிகிதராகக் கடமையாற்றிய திரு. எம். பாலசுப்பிரமணியம் ஜனவரி மாதம் புத்தளத்திற்கு இடமாற்றம்செய்யப்பட்டுள்ளார். மற்றும் லிகிதர்களான திரு. எம். ஆர் துரைராசா இரத்தினபுரிக்கும், திரு. ஏ. மார்க்கண்டு மன்னருக்கும் மாற்றம்செய்யப்பட்டுள்ளனர்.

---

## காசி காண்டப் படிப்பு

சுழிபுரம், ஞாயிறு

வழக்கம்பரை அம்மன் கோவிலில் காசிகாண்டப் படிப்பு நேற்று ஆரம்பமானது. இப்படிப்பு தொடர்ந்து ஒரு மாதத்துக்கு நடைபெறும்.

---

## பயிற்சியாளர் தெரிவுசெய்யப்பட்டனர்

பளை, ஞாயிறு

புலோப்பளை கிழக்கு நெசவுநிலையத்திற்கு பயிற்சி பெறுவதற்காக அப்பகுதியைச்சேர்ந்த சிலபெண்கள் காரியாதிகாரிதிரு. வ. கந்தப்பிள்ளையினுல் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். இந்நெசவுநிலையத்தின் வேலைகள் ... நடை...

---

## இ. போ. ச. வுக்கு அதிக லாபம்

கொழும்பு, ஞாயிறு

நிதி வருடம் 1966 — 67க்கு ரூ 11,834,689 லாபம் கிடைக்குமென இ. போ. ச. எதிர்பார்க்கிறது. அதனுடைய நிதிக்கணக்கின்படி. எதிர்பார்க்கப்படும் செலவு ரூ 249,870,311ம், வரவு ரூ 260,905,000ம் ஆகும்.

பஸ் கட்டணங்களைச் சற்று உயர்த்தினுல் குறிப்பிடத்தக்க அளவு வருமானம் பெறலாமென இ. போ. ச. அதிகாரிகளும், உத்தியோகத்தர்களும் அபிப்பிராயம் தெரிவித்துள்ளனர். ஆனல், இ. போ. ச. லாபம் உழைக்கும் ஸ்தாபனமல்லவெனவும், அதன் முக்கிய நோக்கம் சேவையேயாகுமெனவும் ஆதலால் பிரயாணக் கட்டணங்களை உயர்த்த முடியாதெனவும் இ. போ. ச. தலைவர் திரு. ஆர் வி, டி. சில்வா திட்டவட்டமாகத் தெரிவித்துள்ளார்.

---

## தமிழ்த் தந்திகளை ஏற்க மறுப்பு?

கொஸ்லாந்தை, ஞாயிறு

கொஸ்லாந்தை நகர தபாற் கந்தோரில் தமிழ்த் தந்தி ஏற்க மறுக்கப்படுகிறதாம். இத்தபாற் கந்தோர் ஆரம்பமான காலத்திலிருந்து சிங்கள, ஆங்கில தந்திகள் மட்டுமே ஏற்கப்பட்டு வந்ததால் தமிழ்த் தந்திகள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது என்று தபாற்கந்தோர் அதிகாரிகள் கூறுகின்றனராம்.

தமிழர்கள் அதிகமாக இப்பகுதியில் வாழ்ந்தபோதிலும் வேறு இடங்களிலிருந்து வரும் தமிழ்த் தந்திகளை ஏற்க மறுக்கப்படுவதுடன் அவைகள் தந்தி கொடுத்தவருக்கே திருப்பி அனுப்பப் படுகின்றனவாம்.

---

## நாடு முன்னேற தஹா கூறும் யோசனை

நாவலப்பிட்டி, ஞாயிறு

பததேகம பகுதிக்கு விஜயம் செய்த உள்நாட்டு மந்திரி திரு. டபிள்யு தஹநாயக்கா அப்பகுதியில் மூன்று நெசவுநிலையங்களைத் திறந்து வைத்தார்.

நெசவு நிலையமொன்றை அவர் திறந்து வைத்துப் பேசுகையில், ''நாட்டின் எதிர்காலம் இந்நாட்டுப் பிரஜைகளிடமே தங்கியுள்ளது. வெளிநாட்டுப் பொருள்களை நாம் எவ்வளவு புறக்கணிக்கின்ருேமோ அவ்வளவுக்கவ்வளவு நம்நாடு முன்னேறும். விரைவில் நம் நாட்டுச் சேலைகள் மேல்நாடுகளுக்குச் செல்லவிருக்கிறது என்பதையும் மகிழ்ச்சியுடன் தெரிவிக்கின்றேன்'' என்று கூறினர்.

---

## "விவேகமான செயலாகும்"

உடுவில், சனி

அகில இலங்கைத் திருவள்ளுவர் மகாசபைத் தலைவர் திரு. ஆசீர்வாதம் ஹென்றி உத்தேச சத்தியாக்கிரகம் ஒத்திவைக்கப்பட்டது விவேகமான ஒரு செயல் எனத் தெரிவித்துள்ளார்.

சிறுபான்மைத் தமிழ் மக்கள் அனுபவிக்க இருந்த பல இன்னல்கள் இப்போது தவிர்க்கப்பட்ட தோடல்லாமல் சிறுபான்மை மக்கள் இச்செயலினுல் தமதுபெருந்தன்மையையும் காட்டியுள்ளனர் என்றும் வடமாகாண அதிபர் திரு. வேர்ணன் அபயசேகரா, தமிழரசுக்கட்சித் தலைவர்கள் மற்றும் ஏனைய பெரியார்களையும் இதற்காக பாராட்டுவதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

---

## பயிர்ச்செய்கைக்குழு தீர்மானங்கள்

பூநகரி, ஞாயிறு

பயிர்ச்செய்கைக்குழு சமாஜக் கூட்டம் பூநகரி மகேஸ்வர வித்தியாசாலையில் திரு. வை. வல்லிபுரம் தலைமையில் நடைபெற்றது பின் வரும் தீர்மானங்கள் 21 அங்கத்தவர் கொண்டசபையில் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டன

மக்களிடமிருந்து பெறப்படும் நெல்லை இப்பகுதிமக்களுக்கு கூப்பனுக்கு விநியோகிக்க நடவடிக்கை எடுக்குமாறு கா. பொ. இரத்தினம் எம். பி. யைக் கோருவது. சனல் விதைபெற்றுத் தரும்படி விவசாயப் போதனசிரியரைக் கோருதல்; பகிரங்க வேலைகளை குழு எடுத்துச் செய்வதற்கு முயற்சி மேற்கொள்ளது.

இக்கூட்டத்திற்கு பெரும்பாக உத்தியோகத்தர் திரு. ஏ. எம். இப்ராம் லெப்பை இருக்ஷிகப் போதனசிரியர் திரு. சி. நித்தியானந்தன், உணவு உற்பத்தி மேற்பார்வையாளர் சி. கணேசன் ஆகியோர் சமுகமளித்திருந்தனர்.

---

## பாடசாலையின் முன்மாதிரி

நாவலப்பிட்டி, ஞாயிறு

''முழங்காலைத்தெரிய கவுண் அணிய வேண்டாம், லிப்ஸ்டிக் பூசவேண்டாம், குதி உயர்ந்த சப்பாத்து அணிய வேண்டாம்'' என்று நாவலப்பிட்டி பாலிகா மகாவித்தியாலய மாணவிகளை ஆசிரியைகள் எச்சரித்துள்ளனராம்.

இவற்றை மீறி நடக்கும் மாணவிகள்மீது நடவடிக்கை எடுக்க கல்லூரி அதிபரால் ஐந்து ஆசிரியைகளைக் கொண்ட குழு ஒன்றும் நியமிக்கப்பட்டுள்ளதாம்.

---

## மண்வள பாதுகாப்பு வாரம்

நாவலப்பிட்டி, ஞாயிறு

கண்டி மாவட்டத்தில் இன்று முதல் 26ம் திகதி வரை மண்வளப்பாதுகாப்பு வாரம் கொண்டாடப்படுகிறது

கிராமசேவையாளர்கள், காரியாதிகாரிகள், கண்டி அரசாங்க அதிபர் திரு. மஹிந்தா விஜயநாயகாவின் தலைமையில் விழாவுக்கான ஏற்பாடுகளைச் செய்துள்ளனர்.

மண்வளப் பாதுகாப்பு வாரம் கடந்த வருடங்களைப் போலல்லாது கிரமமான முறையில் அனுஷ்டிக்கப்படும். மண்வளத்தைப்பாதுகாக்க வேண்டிய முறைகள் பற்றி கிராம வாசிகளுக்கு நடைமுறைப்பயிற்சி அளிக்கப்படும்.

---

## கந்தசஷ்டி விழா

உடுவில், ஞாயிறு

யாழ்ப்பாணம் பரமேஸ்வராக்கல்லூரி மாணவர்களும், உடுவில் இராமநாதன் கல்லூரி மாணவிகளும் சேர்ந்து இராமநாதன் கல்லூரியில் கந்தசஷ்டி விழாவினை சிறப்பாகக் கொண்டாடினர்.

---

## விவசாய அபிவிருத்தி

பளை, ஞாயிறு

புலோப்பளை கிராமசபை வட்டாரமான பெரியபளைக் கிராமத்தில், 120 அடி ஆழமான கிணறு தோண்டும் முயற்சியில் அரசாங்க நீர்ப்பாசன இலாகா ஈடுபட்டுள்ளது. இப்பகுதியில் விவசாயத்தை விருத்தி செய்வதற்கும் குடிதண்ணீர்த் திட்டத்தை அமுல் நடத்துவதற்கும் மேற்படி திட்டம் நீர்ப்பாசன இலாகாவால் ஏற்றுக் கொள்ளப்பட்டது. கிணறு தோண்டுவதற்குரிய பூர்வாங்க வேலைகள் நடைபெற்று வருகின்றன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''கிராமங்கள்தோறும்

# நடமாடும் நூல் நிலையங்கள் நிறுவப்படவேண்டும்

## யாழ். இலக்கிய வட்டம் கோரிக்கை

திருநெல்வேலி, திங்கள் "மக்களிடையே அறிவு வளர்ச்சியையும் இலக்கிய உணர்வையும் ஏற்படுத்தும் முகமாக நடமாடும் சுற்று நூலகங்களைக் கிராமங்கள் தோறும் ஏற்படுத்தவேண்டுமென உள்ளூராட்சி மந்திரியைக் கேட்பதோடு, மேற்படி திட்டத்தை வரிட்சார்த்தமாக யாழ்ப்பாணத்தில் கொண்டுவர வேண்டுமென உள்ளூராட்சி உதவி ஆணையாளரைக் கேட்டுக்கொள்வதென்ற தீர்மானம் யாழ் இலக்கிய வட்டக் கூட்டத்தில் அண்மையில் நிறைவேற்றப்பட்டுள்ளது.

இரசிகமணி கனகசெந்திநாதன் தலைமையில் நடைபெற்ற மேற்படி வட்ட உறுப்பினர் கூட்டத்தில் பின்வரும் தீர்மானங்களும் நிறைவேற்றப் பட்டுள்ளன.

ஈழத்திலிருந்து வெளிவந்த நூல்களை நூல்நிலையங்களில் இடம்பெறச் செய்யவேண்டுமென்ற] நோக்குடன் செயலாற்றிவரும் உள்ளூராட்சி உதவி ஆணையாளர் திரு. எஸ். சி. மாணிக்கவாசகரைப் பாராட்டுவது; எதிர்வரும் டிசம்பர் மாதம் பதினைந்தாம் திகதி மேற்படி வட்டத்தின் வருடாந்த விழாவைக் கொண்டாடுவதுடன் விழாவையொட்டிச் சிறப்புமலர் ஒன்றையும் வெளியிடுவது; அண்மையில் பம்பாய்த் தமிழ்ச்சங்கம் நடாத்திய நாடகப் போட்டியில் இரண்டாவது பரிசு பெற்று ஈழத்து இலக்கிய உலகுக்குப் பெருமைதேடித் தந்த திரு. செ. மரகசாமி இலங்கை திரும்பியதும் அன்னாரைக் கௌரவிப்பது; ஈழத்து இலக்கிய உலகிற்குத் தமிழ்ப் பணியாற்றி வரும் அறிஞர்களான திரு. ந. சி. கந்தையாபிள்ளையையும் கவிஞர் யாழ்ப்பாணனையும் ஆண்டு விழாவில் பாராட்டிக் கௌரவிப்பது.

## எதிரி விடுதலை

சாவகச்சேரி, ஞாயிறு சாவகச்சேரிப் பகுதியில் உள்ளசங்கத்தானையில் எஸ். சின்னத்துரை எம். யோகரத்தினம் ஆகிய இருவரும் இவ்வருடம் அக்டோபர் 2ம் திகதி அங்குள்ள கந்தசுவாமி கோவிலை உடைத்து ரூபா 162 பெறுமதியான பித்தளைப் பொருட்களைத் திருடியதாகவும், கள்ளப்பொருட்கள் எனத் தெரிந்தும் அவற்றை வைத்திருந்ததாகவும் சாவகச்சேரிப் பொலிசாரால் குற்றஞ் சாட்டித் தொடரப்பட்ட வழக்கு சாவகச்சேரி மஜிஸ்திரேட் திரு. ஒருபேட் சில்வா முன்னிலையில் விசாரணைக்கெடுக்கப் பட்டபோது மாஜிஸ்திரேட் எதிரிகள் இருவரையும் சுற்றவாளிகளாகக்கண்டு விடுதலை செய்தார். எதிரிகள் சார்பில் புறக்டர் திரு வி. செல்லத்தம்பி ஆஜரானார்.

## கட்டுவனிடம் இராணுவம் தோல்வி

அளவெட்டி, ஞாயிறு சிநேகித பூர்வமாக நடைபெற்ற ஒரு உதைபந்தாட்டப் போட்டியில், கட்டுவன் தெரிவுக்கோஷ்டியும் பலாலி இராணுவக் கோஷ்டியும் மோதிக்கொண்டதில் கட்டுவன் வெற்றிபெற்றது.

போட்டியின் ஆரம்பம் முதல் முடிவுவரையும் இருதரப்பினரும் காரசாரமாக விளையாடினர்.

முடிவில் கட்டுவன் தெரிவுக் கோஷ்டி 3-1 கோல்களால் வெற்றியீட்டியது. மத்தியஸ்தராக திரு. சிவானந்தம் கடமையாற்றினார்.

## உஷார் நடவடிக்கை

சாவகச்சேரி, ஞாயிறு நேற்று சாவகச்சேரிப் பொலிசார் கைதடி, நாவற்குழி, தச்சன்தோப்பு ஆகிய இடங்களில் உள்ள கடைகளில் திடீர் சோதனை நடத்தினர். இதன்பயனாக சில கடைகளில் சாராயம் இருக்கக்கண்டுபிடிக்கப் பட்டது.

## 'மாவட்டசபையினால் நன்மை கிடையாது

கொஸ்லாந்தை, ஞாயிறு 'மாவட்டசபை நிறுவுதால் சிங்கள மக்களுக்கு ஆபத்தே தவிர ஒரு சிறுநன்மையுமில்லை' என்று கம்பளை சந்துரபசன இராமசபையின் மாதாந்தக் கூட்டத்தில் மாவட்டசபைகள் நிறுவுவதை எதிர்த்து சபைத் தலைவர் திரு. ஜெயரட்ண பேசுகையில் கூறினார். இப்பிரேரணையை ஐக்கிய தேசியக் கட்சி உறுப்பினர் திரு. கே. பி. அத்தப்பத்து ஆமோதித்தார்.

திரு. ஜெயரட்ண தொடர்ந்து பேசுகையில், மாவட்ட சபைகள் நிறுவுவதால் யாழ்ப்பாணம், திருக்கோணமலை அகிய இடங்களில் நிறுவப்படும் துறைமுகம், விமானக்கூடம் ஆகிய வேலைத்தளங்களில் சிங்களவர்களுக்கு இடமில்லாமல் போய்விடுவதோடு வளமிக்க மண்ணில் ஒரு அடி நிலம் கூட சிங்களவர்களுக்குக் கிடைக்காமல் போய்விடும் என்று கூறினார்.

## அபிஷேகம்

நவாலி, ஞாயிறு நவாலியூர் வடக்கு அஷ்டலக்ஷ்மி விசாலாட்சிசமேத விஸ்வநாத சுவாமிக்கு நாளை திங்கட்கிழமை பஞ்சவிம்சதிகலசாபிஷேகமும் உற்சவமும் நடைபெறும்.

## செய்திச் சுருக்கம்

### 'அதிக உதவி தருக'

2441 சிறு கைத்தொழில் கமிட்டிகள், தற்போது கிடைத்து வரும் உதவி போதாமையால் கூடிய உதவி தரும்படி கோரி கூட்டுறவுப் பகுதிக்கு விண்ணப்பங்கள் அனுப்பியுள்ளன.

° ° °

### உணவுப் பயிர்

கிராம அபிவிருத்திச் சங்கங்கள், மாதர் சங்கங்கள் ஆகியவற்றின் உதவியுடன் நாடு பூராவும் உணவுப் பயிர்களைப் பயிரிட அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

° ° °

### 'தமிழில் கிடைக்கும்'

1967ம் ஆண்டிற்கான ஆசிரிய இடமாற்றப் பத்திரம் தமிழிலும் வெளியிடப் பட்டுள்ளது.

° ° °

### ரத்து

நியமனங்களை நிரந்தரமாக்க சிங்களத்தில் தேர்ச்சி பெற வேண்டும் என்ற இருந்த நிபந்தனை அரசாங்க சேவையில் சேர்ந்துள்ள தமிழ் ஆங்கில சுருக்கெழுத்தாளர்களுக்கும் தட்டெழுத்தாளர்களுக்கும் ரத்து செய்யப்பட்டுள்ளது.

° ° °

### சிறுத்தையின் தொல்லை

நாரளைப் பகுதியிலுள்ள சிறுத்தைப்புலி ஆடுகளையும் நாய்களையும் பிடித்துத் தின்று வருவதாகத் தெரியவருகிறது.

° ° °

### தீவிர நடவடிக்கை

ஆயுதந்தரித்து வீதிகளில் அலைந்து திரிந்து பொது மக்களைக் கொள்ளையடிக்கும் கொள்ளைக் கோஷ்டியினரைக் கண்டுபிடிக்க பொலிஸ் கோஷ்டியினர் தீவிரமாக ஈடுபட்டுள்ளனர்.

## 'காலி இடங்களை நிரப்புக'

யாழ்ப்பாணம், திங்கள் யாழ்ப்பாண அரசாங்க செயலகத்தில் காலியாகவிருக்கும் சுருக்கெழுத்தாளர், தட்டச்சு இயக்குனர் பதவிகளை உடனடியாக நிரப்பும்படி அரசாங்க எழுதுவினைஞர்சங்கம் திறைசேரி அதிகாரியைக் கேட்டுள்ளது.

## கெனடி தினம்

சுழிபுரம், ஞாயிறு தொல்புரம் கெனடி கழகத்தினர் கெனடி தினத்தை சிறப்பாகக் கொண்டாட ஏற்பாடுகள் செய்துள்ளனர்.

செவ்வாய்க்கிழமை நடைபெறும் இவ்விழாவில் வட்டுக்கோட்டை எம்.பி. திரு. அ. அமிர்தலிங்கம் உட்பட வேறுபலரும் உரைநிகழ்த்துவார்கள்.

# கிளிநொச்சிப் பகுதி நவீன நகரமாகும்

## யாழ் மாவட்ட இணைப்புக் குழு கூட்டத்தில் தீர்மானம்

யாழ்ப்பாணம், திங்கள் கிளிநொச்சிப் பகுதியை ஒரு நவீன நகரமாக்குவதென்று யாழ்ப்பாணம் அரசாங்க செயலக ஆலோசனை மண்டபத்தில் நடைபெற்ற மாவட்ட இணைப்பு குழு கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது.

யாழ்ப்பாண அரசாங்க அதிபர் திரு வேர்ணன் அபயசேகரா தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்தில் தமிழ் [illegible] எம். பி. க்களும் இலாகா உத்தியோகத்தர்களும் உள்ளூராட்சி மன்ற தலைவர்களும் கலந்துகொண்டனர்.

கேரதீவிலிருந்து சங்குப்பிட்டிக்கு செல்லும் பாதைக்குப் பதிலாக நேரடியான பாதை போட்டு, பூநகரி மூலம் மன்னருக்கு செல்ல வசதி செய்வதென்றும் முடிவுசெய்யப்பட்டது.

தமிழ்ப்பகுதியிலுள்ள பொலிஸ் உத்தியோகத்தர் தமிழில் தேர்ச்சிபெற்றிருக்காததால், மக்களுக்குகஷ்டமேற்படுவதாகவும், தமிழில் தேர்ச்சிபெற்ற பொலிஸ் உத்தியோகத்தர்களை நியமிக்கவேண்டுமென்றும் தீர்மானிக்கப்பட்டது.

யாழ்ப்பாணம் புகையிலையை இந்தியாவிற்கு அனுப்பி, அங்கிருந்து நல்லரக ஜவுளிகளை இறக்குமதி செய்ய வேண்டுமென்றும், புகையிலை ஏற்றுமதிக்கு இந்திய அரசாங்கம் ஏற்படுத்தியுள்ள தடையைநீக்க, வர்த்தக அமைச்சரை ஒரு வர்த்தக ஒப்பந்தம் செய்யும்படி கேட்டுக்கொள்வதென்றும் தீர்மானிக்கப்பட்டது.

## மாயமா மந்திரமா?

சுழிபுரம், ஞாயிறு வழக்கம்பரை அம்மன் கோவிலுக்கு அருகாமையில் உள்ள ஒரு வீட்டில் பல அதிசய சம்பவங்கள் நடைபெறுகின்றன.

துணிகள், சேலைகள் மாயமாக மறைகின்றன. நேற்று முன்தினம் வீட்டுக்குள்ளிருந்த விலைமதிப்புள்ள சேலை, பலரும் பார்த்துக் கொண்டிருக்க மாயமாக மறைந்துவிட்டதாம்.

## சிறுமியிடம் திருட்டு

உடுப்பிட்டி, ஞாயிறு கந்தசஷ்டி விரதத்திற்காகத் தொண்டமனாறு செல்வச் சந்நிதிக்குச் சென்ற கரணவாய் தெற்கைச் சேர்ந்த கே. கந்தவனம் என்பவர், அவரது நாலு வயது மகளான சிவமணியைத் தனது அருகில் நிறுத்திவிட்டுச் சுவாமி தரிசனஞ்செய்கையில், சிவமணியின் கையிலிருந்த ஒரு சோடி தங்கக் காப்புகளை யாரோ திருடிவிட்டதாகப் பொலிஸில் புகார்செய்துள்ளார்.

## களைபிடுங்கு விழா

எழுதுமட்டுவாள், ஞாயிறு உசன் இராமநாதன் மகாவித்தியாலயத்தைச் சேர்ந்த இருநூற்றுக்கும் அதிகமான மாணவ மாணவிகள் உசன் வயல் வெளியில் கடந்த சில நாட்களாகக் களைபிடுங்கும் பணியில் ஈடுபட்டுவருகின்றனர். வித்தியாலய அதிபர் திரு. ம. சத்தியமூர்த்தியும், உதவி ஆசிரியை திருமதி ப. பரமேஸ்வரனும் மாணவ மாணவிகளுடன் சேர்ந்து களைபிடுங்கினர்.

## தாக்குதல் வழக்கு: விசாரணை ஒத்திவைப்பு

திருநெல்வேலி, ஞாயிறு தந்தையையும், மகனையும் அடித்துக் காயப்படுத்தியதாக யாழ்ப்பாணம் மாஜிஸ்திரேட் கோர்ட்டில் தொடரப்பட்ட வழக்கில் மூன்றும் எதிரிக்குக் கட்டளை கொடுக்காததால் வழக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

இவ்வழக்கில் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியைச் சேர்ந்த சரவணமுத்துதுரைராசா என்பவரை அடித்துப் படுகாயம் விளைவித்ததாகவும், அவரது மகனான குணபாலசிங்கத்தைப் போத்தலால் அடித்துக் காயப்படுத்தியதாகவும் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த வீரசிங்கம், ஜெகநாதன், பாலன் ஆகிய மூவர்மீதும் குற்றஞ் சாட்டப்பட்டுள்ளது.

எதிரிகள்சார்பில் புறக்டர் தளையசிங்கம் யோகநாதன் ஆஜராயிருந்தார். மூன்றும் எதிரியான பாலனுக்குக் கட்டளை கொடுக்கப்படாததால் மாஜிஸ்டிரேட் திரு. கி. ஜே. ராஜரட்ணம் மேல் விசாரணையை ஜனவரிமாதம் 5-ம் திகதிக்கு ஒத்திவைத்தார்.

## 11 ஏக்கர் நிலத்தில் களைபிடுங்கினர்

சாவகச்சேரி, ஞாயிறு மறவன்புலம் சகலகலாவல்லி வித்தியாசாலை மாணவர்கள் பாடசாலை தலைமை ஆசிரியர் திரு. ந. இளையப்பாவின் உதவியுடன் முன்னாள் தலைமையாசிரியர் திரு. த. பொன்னம்பலம் தலைமையில் களைபிடுங்கினர்.

மாணவிகள் உட்பட 294 பேர் சேர்ந்த இக்குழுவினர் 5 நாட்களில் பதினொன்றரை ஏக்கர் நிலத்தில் களைபிடுங்கினர்.

## காவலாளி தாக்கப்பட்டாராம்

யாழ்ப்பாணம், திங்கள் நாவற்குளி அரசாங்க தானியக் களஞ்சியத்தில் கடமையாற்றும் காவலாளரான திரு. ந. சின்னாண்டி என்பவர் கடமையிலிருக்கும் போது வெளியிலிருந்து வந்த மூன்று நபர்களால் தாக்கப்பட்டதாக பொலிஸில் புகார்செய்யப்பட்டுள்ளது. முதலில் சாவகச்சேரிப் பொலிஸாரிடமும் பின்னர் யாழ்ப்பாணம் பொலிஸ் நிலையத்திலும் முறைப்பாடுகள் செய்யப்பட்டதாகத் தெரிகிறது.

## இவர்களும் பாதிக்கப்பட்டனர்

பண்டத்தரிப்பு, ஞாயிறு பண்டத்தரிப்பு, பெரியவிளான், இளவாலை ஆகிய இடங்களில் சொந்தத்தில் மில் வைத்து தொழில் நடாத்துவோர் மிளகாய் ஆகியவற்றின் கட்டுப்பாடு காரணமாகத் தமக்குக் குறைந்த வருமானமே இப்பொழுது கிடைப்பதாகத் தெரிவித்துள்ளனர்.

## நெசவு நிலையங்கள்

பளை, ஞாயிறு பச்சிலைப்பள்ளி காரியாதிகாரியின் பிரிவில் 5 நெசவு நிலையங்கள் அரசாங்கத்தினதும் கிராம முன்னேற்றச் சங்கங்களது ஆதரவில் நிறுவப்பட்டுள்ளன. [illegible] மாதம் முதல் வேலைகள் நடைபெறும்.


# கிரீக்கோ சூப்பர் கோப்பி

## கொழும்பு ஜோன் கிரின் அன்ட் கம்பனியாரின் உற்பத்தி

கவர்ச்சியூட்டும் பைக்கற்றுகள்! அதி நறுமணம் கொண்டது!

மறக்கவே முடியாத ருசியுடையது! நிதான விலை!

கொழும்பில் உள்ள கிரீக்கோ கைத்தொழில் நிலையத்தில் விசேஷ தயாரிப்பு முறைகளைக் கையாண்டு வறுத்து அரைக்கப்பட்டது.

யாழ்ப்பாணத்தில் கிடைக்குமிடம்:

**M. M. T. P.**

142, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# மது போதையால் குழந்தையை இழந்தார்

திருநெல்வேலி, திங்கள் "நீர் மதுபோதையில் படுத்திருந்ததால் உமக்கு அருகிலேயே எரிந்துகொண்டிருந்த உமது குழந்தையை உம்மால் காப்பாற்றமுடியாது போய்விட்டது. மதுபானத்தை அருந்தியதன் விளைவாக உமது குழந்தையை இழந்துவிட்டீர். இதை ஒரு பாடமாக வைத்துக்கொண்டு மதுபானம் அருந்துவதை விட்டுவிடும். உழைக்கும் பணத்தைக் கொண்டு குடிப்பதைவிட்டு விட்டு இனிமேலாவது உமது குடும்பத்தைக் கவனித்து நல்லமுறையில் வாழப்பழகும்" என்று பண்டத்தரிப்பில் நடைபெற்ற ஒரு மரண விசாரணையின்போது திடீர் மரணவிசாரணை அதிகாரி திரு. எஸ். கனகரத்தினம் மரணமான குழந்தையின் தந்தையை பார்த்துக்கூறினார்.

பண்டத்தரிப்பு பிராம்பத்தையைச் சேர்ந்த கணபதிப்பிள்ளை சுந்தரலிங்கம் என்ற 8 மாதக் குழந்தை மண்ணெண்ணெய் விளக்கினால் எரிந்து மரணமானது சம்பந்தமாக யாழ்ப்பாணம் அரசினர் ஆஸ்பத்திரியில் நடைபெற்ற மரண விசாரணையின்போது காலஞ்சென்ற குழந்தையின் தாய் சாட்சியமளிக்கையில், சம்பவம் நடந்த தினம் தான் வயலில் இருந்து வரும் போது வீட்டுக்குள் பாயில் படுத்திருந்த தனது குழந்தை அருகிலிருந்த விளக்கினால் தீப் பிடித்து எரிந்து கொண்டிருந்ததாகவும், தனது கணவனும் அங்கு நித்திரையாகக் கிடந்ததாகவும், ஆனால் அவர் எழுந்து பார்க்கவில்லையெனவும், அவர் மதுபோதையில் இருந்ததாகவும் தெரிவித்தார்.

மரண விசாரணை அதிகாரி விபத்தினால் ஏற்பட்ட மரணமெனத்தீர்ப்பளித்தார்.

## ஆத்மீக . . .

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

பெண்மணிகள் நல்ல சேவை செய்கின்றனர். இந்து சமூக குறைகள் நீங்கி, சமூகம் முன்னேற இந்துப் பெண்களின் சேவை மிக அவசியம். சகோதரி நிவேதிதா தேவியின் நூற்றாண்டு விழா அடுத்த வருடம் வருகிறது. அதற்குள் இந்துப் பெண்கள் இவ்வித சேவையில் ஈடுபட்டு, அவ்விழாவை சிறப்பிக்கவேண்டும்''.

இவ்வாறு சுவாமி ரங்கநாதானந்தா, யாழ்ப்பாணம் ஸ்ரீ ராமகிருஷ்ண சங்கத்தார் அளித்த ஓர் வரவேற்பு உபசாரத்துக்கு பதிலளிக்கையில் கூறினார். ஸ்ரீ ராமகிருஷ்ண சங்கம் யாழ்ப்பாணத்தில் அமைக்கப்பெறுவது வரவேற்கத் தக்கதென்றும், இங்குள்ளவர்கள் தியாக சேவையில் அதிகம் ஈடுபடவேண்டுமென்றும் சுவாமிகள் அறிவுறுத்தினார். அதிபர் திரு. அம்பிகைபாகன் சுவாமிகளை வரவேற்றுப் பேசினார்.

நேற்று காலையில் கொழும்பிலிருந்து வந்த சுவாமி ரங்கநாதானந்தாவும் சுவாமி பிரேமாத்மானந்தாவும் விமானமூலமாக வந்து சேர்ந்தனர். பலாலி விமான நிலையத்தில் ஸ்ரீராமகிருஷ்ண சங்கத்தைச்சேர்ந்த பிரமுகர்கள் இரு சுவாமிகளையும் வரவேற்றனர்.

### இன்று

இன்று காலை 9 மணிக்கு வைத்தீஸ்வர வித்தியாலயத்தில் ''இந்தியாவில் கல்வியின் நோக்கம்" என்பது பற்றி சுவாமி பேசுவார்.

# புதிய கல்வித் திட்டத்தால் பாதிக்கப்படும் ஆசிரியர்கள்

## 3 ஆண்டில் ஓய்வுபெற வசதி

கொழும்பு, ஞாயிறு பத்து ஆண்டுகளுக்கு மேல் தொழில் புரிந்துள்ள அரசாங்கப் பாடசாலை ஆசிரியர்கள் தாம் புதிய கல்வித் திட்டத்தினால் பாதிக்கப்படுவதாகக் கருதினால் மூன்று ஆண்டு காலத்தில் ஓய்வு பெற்றுக் கொள்ள வசதியளிக்கப்படவிருக்கின்றது.

வெள்ளையறிக்கையை அடிப்படையாக வைத்து தயாரிக்கப்படவிருக்கும் புதியமசோதாவொன்றில் மேற்கண்ட அம்சம் இடம் பெறவிருப்பதாக அறியப்படுகிறது.

இந்த மசோதா மிகவிரைவில் பிரதிநிதிகள் சபையில் சமர்ப்பிக்கப்படலாம் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

10 ஆண்டு முதல் 20 ஆண்டுகள் வரை சேவை புரிந்துள்ள ஆசிரியர்கள் தமது சேவையில் 5 ஆண்டுகள் மேலதிகமாகசேர்க்கப்பட்டு ஓய்வுபெற வசதியளிக்கப்படுவார்கள். 20 ஆண்டுகள் சேவைபுரிந்துள்ள ஆசிரியர்கள் தாம் ஓய்வுபெற வரும்பின் 10 ஆண்டுகள் அதிகமாக சேவை புரிந்ததாக கணிக்கப்பட்டு ஓய்வுபெற வசதியளிக்கப்படுவார்கள்.

தற்பொழுதுகல்வி இலாகா பாடசாலைகளை சீரமைப்பதில் ஈடுபட்டிருக்கின்றது.

# முதலாளிமாருக்கு மந்திரியின் கடும் குறிப்பு

## நாட்டின் நலனைக் கருதி பேச்சுவார்த்தைநடத்த அழைப்பு

கொழும்பு, ஞாயிறு தொழில் மந்திரி திரு. எம். எச். எம். முகம்மது இன்று முதலாளிமார் சம்மேளனத்திற்கு மிகவும் கடுமையான வார்த்தைகள் அடங்கிய கடிதம் ஒன்றை அனுப்பியுள்ளார்.

'தற்போது ஏற்பட்டுள்ள வேலைநிறுத்த நிலைமையை சுமுகமான ஒரு முடிவுக்குக் கொண்டுவ நீங்கள் அக்கறை கொள்ளாமல் தற்போதைய உங்கள் நிலைமை உறுதிப்படுத்துவதிலேயே அக்கறை கொண்டிருப்பதாகத் தெரிகிறது' என்று மந்திரி தமது கடிதத்தில் குறிப்பிட்டிருக்கின்றார்.

மந்திரி வர்த்தக ஊழியர் சம்மேளனத்துடன் நடத்திய பேச்சுவார்த்தைகள் பற்றி அவர்களின் கடிதத்தில் விளக்கமாகக் குறிப்பிடப்படவில்லை என்றும் பேச்சுவார்த்தைகள் எழுத்தில் பதிவு இல்லாமல் போனது வருத்தத்திற்குரியது. இனிமேல் நடத்தப்படும் பேச்சுவார்த்தைகள் எல்லாவற்றையும் பதிவு செய்து கொள்ளப்படுமென்றும் மந்திரி தெரிவித்துள்ளார்.

எவ்வாறுயினும் நாட்டின் நலனை உத்தேசித்து தாம் தெரிவித்துள்ள 8 அம்சத் திட்டம் பற்றி மேலும் முதலாளிமார் சம்மேளனத்துடன் பேச்சுவார்த்தை நடத்தத் தயாராகவிருப்பதாகவும் மந்திரி தெரிவித்துள்ளார்.

வர்த்தக ஊழியர் வேலை நிறுத்தம் இன்றுடன் 20 நாளாக 67 ஸ்தாபனங்களில் நடைபெறுகின்றது.

மந்திரியின் இன்றைய கடிதம் பற்றி முதலாளிமார் சம்மேளனக் காரியதரிசி திரு. லின் வீரசேகராவிடம் கேட்டபோது அவர் கருத்தெதுவும் தெரிவிக்கமறுத்துவிட்டார்.

# செங்காவலர் மீது பீகிங் நகரக்கமிட்டி கண்டனம்

ஹாங்கொங், நவ. 20 கலாச்சாரப் புரட்சிக்காரர் என்று தம்மைச் சொல்லிக் கொள்ளும் செங்காவலர் படையினர் தாம் நினைத்தபடி பெரும்பாலான பொதுமக்களைப் பிடித்து, சித்திரவதை செய்வதை பீகிங் நகர் கமிட்டி கண்டித்து எச்சரிக்கை செய்துள்ளது.

சமீபத்தில் பீகிங் அதிகாரியொருவரைப் பிடித்து நான்கு நாள்வரை செங்காவலர் சித்திரவதை செய்தது சம்பந்தமாக பீகிங் நகர் கமிட்டி வன்மையாகக் கண்டித்துள்ளது. இது சம்பந்தமாக செங்காவலரை எச்சரிக்கையும் செய்துள்ளது.

மா-சே-துங்கின் எதிர்ப்பாளர்கள் என்ற ஆதாரமற்ற செய்திகளை வைத்து பலர் செங்காவலரால் கொடுமைக்குள்ளாக்கப்படுவதாகவும் செய்திகள் கூறுகின்றன.

## ஆலங்குளத்துக்கு புதியபாடசாலை

மாலாவி, ஞாயிறு வவுனியாத் தொகுதியிலுள்ள ஆலங்குளம்என்னும் கிராமத்தில் ஒன்பதினாயிரத்து ஐந்நூறு ரூபா செலவில் அரசாங்கம் ஒரு புதிய பாடசாலையை அமைத்துக் கொடுத்துள்ளது. இக் கட்டடவேலையை இப்பாடசாலைப் பெற்றோர் ஆசிரிய சங்கத்தினர் செய்து முடித்துள்ளனர்.

## பொலிஸ செயலுக்கு கண்டனம்

யாழ்ப்பாணம். திங்கள் யாழ்ப்பாணம் மூலைமை? பூந்தோட்ட வளவிலுள்ள ஒரு கள்ளுக்கொட்டிலில் பொலிசார் திடீரெனப்புகுந்து அங்குள்ளோரை அடித்து கிரட்டி சாடியை உடைத்து அட்டூழியம் செய்யப்பட்ட புகாரைத் தொடர்ந்து பொலிஸாரின் செயலைக் கண்டித்து வட இலங்கை கள் இறக்கும் தொழிலாளர் சங்கப்பொதுச் செயலாளர் திரு. எம். சி. சுப்பிரமணியம் வட பகுதி பொலிஸ் உதவி அதிபரிடம் முறையிட்டுள்ளார். இது விஷயமாக நடவடிக்கை எடுக்கப் பொலிஸ் அதிபர் ஒழுங்கு செய்துள்ளதாகத் தெரிய வருகிறது.

பொலிசாரின் அத்துமீறலை எதிர்த்து உள்நாட்டு மந்திரிக்கும், ஐ. ஜி. பி. க்கும் மகஜர் ஒன்றையும் சங்கம் அனுப்பிவைத்துள்ளது.

## ஏலவிற்பனை

**வலி-கிழக்கு பல நோ. கூ. ச. சமாசம், நீர்வேலி**

வருகிற வெள்ளிக்கிழமை 25-11-66 மு. ப. 10-00 மணியளவில் மேற்படி சமாஜக் கந்தோரிலிருந்து சாக்குகளும், கட்டிடத்திற்குப் பாவிக்கப் பட்ட மரங்களும் இன்னும் வேறு பொருட்களும் ஏலத்தில் விற்பனை செய்யப்படும். இவைகளைக் கந்தோர்நேரத்தில் பார்வையிடலாம்.

க வீ கனகசபாபதி
தலைவர்

20—11—66. 1395

## தேவை

தையல் வேலை

தையல் வேலையும் நன்றாகப் பூப்போடவும் தெரிந்த பெண்கள் தேவை. நேரில் சந்திக்கவும். 11/B மொம்சார் கட்டிடம், மேல் மாடி, கிராண்ட் வீதி, யாழ்ப்பாணம். 1168

இப்பத்திரிகை "ஈழநாடு" லிமிடெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் இலக்கம் 62-ல் கோவில் வீதி, மேலவீதி, இலுள்ள அவர்களது அச்சகத்தில் 1966-ம் ஆண்டு நவம்பர் மாதம் 21-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

## திராமசபை பாராட்டு

உடுவில், ஞாயிறு சிறுபான்மைத்தமிழர் ஐக்கிய முன்னணியினர் மேற்கொள்ளவிருந்த சத்தியாக்கிரகப்போராட்டம் கடைசி நேரத்தில் கைவிடப்பட்டது குறித்து உடுவில் கிராம சபை பாராட்டுத் தெரிவித்துள்ளது.

கிராமசபைத்தலைவர் திரு. ச. முத்துலிங்கம் வெளியிட்டுள்ள அறிக்கையொன்றில் "யாழ்ப்பாண அரசாங்க அதிபரின் முயற்சியால் உத்தேச சத்தியாக்கிரக இயக்கம் கைவிடப்பட்டது விவேகமான செயல்'' என்று கூறியுள்ளார்.

## இந்துக்களின்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

சுத்திக் வைதீகத்தை விடாமல், சமூக விஷயங்களில் முற்போக்காக இருப்பார்களென்றே நம்புகின்றேன். அவர்களுக்கும் அவர்களால் கோயிலுக்கு வராமல் தடுக்கப்பட்டுள்ளவர்களுக்கும் எனது அன்பும் நல்வாழ்த்துகளும். அப்படித் தடுக்கப்பட்டுள்ளவர்களை வரவேற்க அவர்களது உள்ளக்கதவுகள் சீக்கிரம் திறக்கப்படும் என்ற நம்பிக்கையுடன் பிரார்த்திக்கின்றேன்.

இச்சமயத்திலே பக்கத்திலிருந்த ஒரு தாய். திடீரென இதைச் செய்யப்படாதென்றும் மெதுமெதுவாகத்தான் செய்யவேண்டுமென்று கூறியதும், ''இதில் மெதுவாக இருக்கமுடியாதென்றும், இந்நிலைமையைச் சீக்கிரத்தில் நீக்கிவிடவேண்டும்'' என்றும் தெரிவித்தார். ''ஆலயங்களில் சென்று வழிபட அனுமதிப்பது. ஹரிஜனங்கள் முன்னேற முதற்படியாகும். மற்றொரு இந்துக் கோயிலில் சென்று வழிபடக்கூடாதென்று கூற யாருக்கும் அதிகாரமில்லை. அப்படித் தடுப்பது பாவமாகும். சில குருமார்கள் அனுசாரமாக இருந்தும் அவர்களை பூசை செய்ய விடும்போது. ஹரிஜனங்களை விடக்கூடாது என்று எப்படித் தடுப்பது?''

## வேலை கிடைத்தது

உடுவில் ஞாயிறு இணுவில் மக்லீட் ஆஸ்பத்திரியில் சில நாட்களுக்கு முன்னர் நடைபெற்றவேலைநிறுத்தத்தில் ஈடுபட்டதனால் ஆஸ்பத்திரி நிர்வாகத்தினரால் தற்காலிகமாக வேலையிலிருந்து நீக்கப்பட்டமதினொரு வேலைபழகும் பெண்தாதிமார்களுக்குமீண்டும் அங்கு வேலைபழகுவதற்கான அனுமதி வழங்கப்பட்டிருக்கிறது.

உடுவில் கிராமசபைத்தலைவர் திரு. ச. முத்துலிங்கம் ஆஸ்பத்திரி நிர்வாகத்தினருடன் நடத்திய பேச்சுவார்த்தைகளைத் தொடர்ந்து இவர்களுக்கு மீண்டும் வேலைகிடைத்துள்ளது.

## பிரதம நீதியரசருக்கு சுப்ரீம் கோர்ட் வரவேற்பு

கொழும்பு, ஞாயிறு இன்று புதிய பிரதம நீதியரசர் எச். என். ஜி. பெர்னாண்டோவுக்கு சுப்ரீம் கோர்டில் அமோக வரவேற்பு அளிக்கப்பட்டது. புதிய பிரதம நீதியரசர் மோட்டார் பொலிஸ் சைக்கிள் வீரர்களின் பாதுகாப்புடன் சுப்ரீம் கோர்ட்டுக்கு வந்து சேர்ந்தார். அவரை கோர்ட் காரியதரிசி திரு. என். நவரட்ணம் மாலை அணிவித்து வரவேற்றார். அட்டோர்ணி ஜெனரல் திரு. அமீர் பாராட்டுரை வழங்கினார். பிரதம நீதியரசர் நன்றி தெரிவித்தார்.

நாளைய தினம் புதிய நீதியரசர் திரு. ஜி. டி. சமரநாயக்க கியு. ஸி. சுப்ரீம் கோர்டில் வரவேற்பு அளிக்கப்படுவார்.

## நச்சுத்திராவகம் அருந்தி மரணம்

திருநெல்வேலி, திங்கள் யாழ்ப்பாணம் சப்பல் வீதியைச் சேர்ந்த சேவியர் பொன்ராசா (50 வயது) என்பவர் நச்சுத் திராவகம் அருந்தி மரணமானார்.

நான்கு பிள்ளைகளுக்குத் தந்தையான இவர் வன்னிவிலாங் குளத்தில் பயிர் வளர்ச்சி மேற்பார்வையாளராகக் கடமையாற்றிவந்ததாக மரணவிசாரணையின்போது தெரிவிக்கப்பட்டது. டாக்டர் சுப்பிரமணியம் பிரேதபரிசோதனை செய்தார்.

## தொடாங்கசலந்தை அபேட்சகர்கள்

கொழும்பு, ஞாயிறு தொடாங்கசலந்தை தொகுதியில் போட்டியிட இருக்கும் அபேட்சகர்கள் பற்றிய ஹேஷ்யம் இப்போது இடைத்திருக்கின்றது.

ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியின் சார்பில் திருமதி ஆர். ஆர். டபிள்யு. ராஜபக்ஷவும் யு. என். பியின் சார்பில் திரு. எஸ். டபிள்யு. அலவத்தவெலவும் அபேட்சகர்களாக நியமிக்கப்படலாம் என்று தெரிகின்றது. இதற்கிடையில் திரு. எஸ். சமரப்பால என்பவரும் சுயேட்சையாகப் போட்டியிடக்கூடும் என்று தெரிகிறது.

## விமான . . .

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

வடபகுதி உதவிசுங்ககலெக்டர் கே. கந்தசாமி முன்னிலையில் ஆஜர் செய்யப்பட்டு விசாரணை செய்யப்பட்டனர். விசாரணை முடிவில் சாஹுல் ஹமீத்துக்கு 2,250 ரூபா அபராதமும், கே. துரைசாமிக்கு 3000 ரூபா அபராதமும் விதிக்கப்பட்டது. கடத்தல்பொருள்கள் யாவும் பறிமுதல்செய்யப்பட்டன.

சுங்கப்பகுதி விசாரணையினால் இவர்கள் இன்று விமானத்தில் திருச்சிசெல்ல முடியவில்லை.

திடீர் மரணவிசாரணை அதிகாரி திரு. எஸ். கனகரத்தினம் மரண விசாரணை நடத்தினார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org